விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்:பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை (14.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# உள்விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும்



## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்விவகாரங்களில் தலையீடு செய்வதனை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டுமென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அண்மையில் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் அமெரிக்கா தேவையற்றதும் பொறுப்பற்றதுமான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக் காட்டியுள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்றில் அர்ஜுன வாக்குமூலம்

(கொழும்பு)

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கா மற்றும் மேல் நீதிமன்றப் பதிவாளர் ஆகியோர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணு நீதிமன்றத்தில் நேற்று பிரதிவாதி சார்பாக சாட்சியமளித்ததாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பயய மெதவெல தெரிவித்தார்.

இரண்டாவது (18ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி விரைவில் வருவார்

(சென்னை)

இந்திய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அண்மைக்காலமாக இந்திய தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் என வெளியாகும் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் நிரந்தர தீர்வுகாணும் வகையில் பேச்சுவார்த்தை நடத்த முகர்ஜி இலங்கை வரவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் (18ஆம் பக்கம் பார்க்க)

## போரின் இறுதியில் நிருபர்களை அனுமதிக்காதது அரசு செய்த தவறு

### சண்டே ஐலண்ட் ஆசிரியர் சாட்சி

(கொழும்பு)

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் செய்தியாளர்களை களத்துக்குச் செல்வதில் இருந்து பெரும்பாலும் தவிர்த்ததன் மூலம் இலங்கை அரசாங்கமும், இராணுவமும் தவறிழைத்திருக்கின்றன என்று போரின் இறுதி நாட்கள் குறித்த விசாரணை செய்யும் ஆணைக் குழுவின் முன்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரில் யார் தவறிழைத்தார்கள் என் பதைக் கண்டறிந்து பழிவாங்கும் நடவடிக்கைகள் கூடாது என்றும் இந்த ஆணையத்தின் முன்பாக சாட்சியமளித்த மூத்த செய்தி ஆசிரியரான சண்டே ஐலண்ட் செய்திப் பத்திரிகையின் மனிக் (18ஆம் பக்கம் பார்க்க)

## போட்டிக்கு ஓடிய வாகனம் மோதி வீதியோரத்தில் நின்ற சிறுமி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

போட்டிக்கு ஓடிய இரு வாகனங்களில் ஒன்று மற்றைய வாகனத்தை முந்த முற்பட்டபோது, ஒன்று வீதியோரமாக நின்ற சிறுமியை மோதியதில் அச்சிறுமி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமாலை சங்கானையில் இடம்பெற்றுள்ளது.

இதில் சங்கானை சலேசியார் கோவிலடியில் நீதவான் நலன்புரி முகாமைச் சேர்ந்த அன்பழகன் லோஜினி (வயது 11) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார். இவர் சங்கானை சிவப்பிரகாசம் (18ஆம் பக்கம் பார்க்க)

## 147 பவுணை யாழில் பறிகொடுத்த குடும்பம் கொழும்பு திரும்பும்போது இடம்பெற்ற விபத்தில் இருவரைப் பறிகொடுத்தது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்று சிறைச்சாலை பஸ் வண்டியுடன் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் மாரவில நகருக்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இருவரில் ஒருவர் 5 வயதுடைய கமலராஜன் சந்தூஸ் எனும் சிறுவனும், மாணிக்கம் சண்முகலிங்கம் 60 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் படுகாயமடைந்த வான் சாரதி உட்பட மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு (18ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் ஒன்றிணையும் தமிழீழ விடுதலைப் புலிகள்

### ரொஹான் குணரத்ன தகவல்

(சிங்கப்பூர்)

பயங்கரவாதம் தொடர்பான மென்மை போக்கு காரணமாக கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாவதற்கான ஏதுநிலைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த தகவல்களை சிங்கப்பூரை தளமாக கொண்ட பயங்கரவாத துறைசார் நிபுணர் ரொஹான் குணரத்ன வெளியிட்டுள்ளார்.

நோர்வேயில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் கனடாவில் மீள் உருவாக்கம் பெற முயற்சிகளை எடுத்து வருவதாக ரொஹான் (18ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதியம்மாவை பார்வையிட்ட பழநெடுமாறனின் விசேட பிரதிநிதி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளை உலகத் தமிழர் பேரவையின் செயலாளரான இராமசாமி பத்மநாதன் நேற்றுக் காலையில் சென்று பார்வையிட்டார்.

இவர் பேரவையின் தலைவரான பழ. நெடுமாறனின் விசேட பிரதிநிதியாகவே யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் பார்வதி அம் மாளை பார்வையிட்டு நலத்தை அறிந்து கொண்டார். (சு)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கூறுவிலை கோரல்

சபையின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் அலுமினிய பாட் டிசன் வேலை செய்வது தொடர்பான கூறுவிலைப் பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அலுவலக நேரத்தில் 18.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று 23.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் கூறு விலைப் பெட்டிக்குள் இடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**பனை அபிவிருத்திச் சபை,**
**தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,**
**01 ஆம் மாடி,**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**பொது முகாமையாளர்,**
பனை அபிவிருத்திச் சபை.

(C-1171)

# பனை அபிவிருத்திச் சபை
# தொழில் வாய்ப்பு

பருத்தித்துறை வீதி, சரசாலையில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனந்தும்பு உற்பத்தி நிலையத்திற்கு பின்வரும் பணிக்கான தொழில்வாய்ப்பு வழங்கப்படுகிறது.

01. இயந்திரம் ஊடாக பனந்தும்பு அடிப்பவர்கள்
(துண்டுக்கூலி அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்)
02. தரமான பனம் மட்டைகள் சரசாலை உற்பத்தி நிலையத்திற்கு ரூபா 1.00 விதம் வழங்குபவர்.

மேற்படி தொழில்வாய்ப்புப் பெற விரும்புவோர் சபையின் கீழ்க்காணும் முகவரிக்கு 25.09.2010 ந் திகதி காலை 9.00 மணிக்கு சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றது.

**தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,**
**கண்டிவீதி, யாழ்ப்பாணம்.**
**தொலை பேசி. :- 021 222 2034**

**பொதுமுகாமையாளர்,**
**பனை அபிவிருத்திச் சபை**

(சி172)

# கனேடிய தமிழ் காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்பட்டமை குறித்துக் கவலை

(கனடா)

கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்பட்டமை குறித்து ரெரண்டோவில் இயங்கி வரும் மேற்படி மனித நேய அமைப்பான வொய்ஸ் ஒவ் கியூமானிட்டி பணிப்பாளர் சபை தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

அது தொடர்பாக மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

கனடாவில் தமிழ் மக்களின் குரலாகத் தற்போது ஒலித்து வரும் கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பு நல்ல பணிகளை மேற் கொண்டு வருகின்றது.

ஆனாலும் இங்குள்ள சில புல்லுருவிகள் அந்த அமைப்பின் நல்ல நோக்கங்களைக் கொச்சைப்படுத்தியும் கண்டித்தும் வருகின்றன.

இது ஒரு ஏற்புடையதான செயலல்ல. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் இரண்டு நாள்களுக்கு முன்னர் கனேடிய தமிழ்க் காங்கிரஸின் தலைமை அலுவலகம் இரவு நேரத்தில் தாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல முக்கிய தகவல்கள் அடங்கிய கோவைகளும் களவாடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு யார் பொறுப்பாளிகளாக இருந்தாலும் அவர்கள் இவ்வாறான சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபடுவது விரும்பக் கூடிய செயல் அல்ல.

கருத்து முரண்பாடுகள் இருந்தால் அவற்றைப் பேசித் தீர்க்கலாம். அதைவிடுத்து வன்முறைகளில் ஈடுபடுவதை எமது அமைப்புக் கண்டிக்கின்றது.

அத்துடன் தனது கவலையையும் தெரிவிக்கின்றது. இவ்வாறு மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கடத்தப்பட்ட முருகன் சிலையை மீள வழங்க இந்தியா விருப்பம்

இலங்கையின் மூதூர் வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் இருந்து சிலரால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்ட பஞ்சலோக முருகன் சிலையைத் தமிழகப் பொலிஸார் மீண்டும் தருவதற்கு இணங்கியுள்ளனர்.

இந்த முருகன் சிலை 2006 ஆம்ஆண்டில் இலங்கையிலிருந்து தமிழகத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் திருச்சியில்இடம்பெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய பொலிஸ் அதிகாரி இராஜேந்திரன் தமது விசாரணைகளிலிருந்து இந்த சிலை இலங்கையைச் சேர்ந்தது எனத் தெரிய வந்ததாகக் குறிப்பிட்டார்.

இதற்கமைய இந்த முருகன் சிலையை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)





**O/L வகுப்புக்கள்**
கணிதம்/ விஞ்ஞானம்
**A/L வகுப்புக்கள்**
இரசாயனவியல்/பௌதிகவியல்
பிரத்தியேகமாகவும், குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.
ஆசிரியர்- S.E நியூட்டன் (B.Sc)
P.No. 0778479154
(2461)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் விகிர்தி வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் திங்கட்கிழமை (16.08.2010) சிவபதம் அடைந்த எமது தந்தையார்

# அமரர் ச.வி.முருகேசு



அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 14.09.2010 இன்று செவ்வாய்க் கிழமை காலை முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். நாளை புதன்கிழமை 15.09.2010 அன்று காலை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு உற்றார், உறவினர், நண்பர்கள், எமது வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**171 டீ பொன்சேகா வீதி,**
**கொழும்பு-5**
**தொலைபேசி:- 011 4378676**

**இங்ஙனம்,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவருக்கு மிகவும் வயதாகி விட்டது. கடைசிக்காலத்தில் அவரிடம் சிலர் வந்தார்கள்.

"உங்களுடைய குரு யார்!" என்று கேட்டார்கள். அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள் உண்டு அவர்களைப்பற்றி நான் சொல்வதென்றால் நேரம் காணாது.

ஆனால் முக்கியமான மூன்று பேரைப் பற்றி மட்டும் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

அதன் பின் சொல்ல ஆரம்பித்தார்.

அந்த மூன்று பேரில் ஒருத்தன் திருடன். ஒரு சமயம் பாலைவனம் வழியாக நான் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது வழிதவறிப் போய் ஒரு கிராமத்துக்குப் போய்விட்டேன்.

நள்ளிரவு நேரம். ஊரே உறங்கிவிட்டது. அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் வீட்டின் சுவரில் ஏதோ செய்து உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தான். அவனிடம் போய்..

"நான் இன்றைக்கு இங்கு எங்கே தங்க முடியும்?" என்று கேட்டேன்.

அதற்கு அவன், "இந்த இரவு வேளையில் அது மிகவும் சிரமம். ஒரு திருடனுடன் உங்களால் தங்க முடியும் என்றால் நீங்கள் என்னுடன் தங்கலாம்" என்றான்.

நான் அவனுடன் ஒரு மாதம் தங்கியிருந்தேன். ஒவ்வொரு நாள் இரவும் "இப்பொழுது நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போவான்.

அவன் திரும்பி வந்தவுடன், "உனக்கு ஏதாவது கிடைத்ததா? என்று கேட்பேன். அதற்கு அவன், "இன்றிரவு ஒன்றுமில்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சிப்பேன்" என்பான். ஒரு போதும் அவன் நம்பிக்கை இழந்ததேயில்லை. எப்பொழுதும் சந்தோஷமாகவே இருந்தான்.

நானும் பலகாலமாக தியானம் செய்து கொண்டிருந்தேன். ஒன்றுமே நடக்கவில்லை .அதனால் மனம் கலங்கி நம்பிக்கை இழந்து விடுவேன். அப்பொழுதெல்லாம் அந்தத் திருடனுடைய விடா முயற்சிதான் ஞாபகத்துக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு நாய்.

ஒரு சமயம் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது. ஒரு நதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகமெடுத்தது. ஓடிவந்து ஆற்றைப் பார்த்தது. அதன் நிழல் ஆற்றில் தெரிந்தது. அதைப் பார்த்துப் பயந்து விட்டது. அதாவது அது தன் சொந்த உருவத்தையே கண்டு பயந்தது. அதைப் பார்த்துக் குரைத்து விட்டு திரும்பி ஓடியது. ஆனாலும் அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததனால் அது மறு படியும் திரும்பி வந்தது. இப்படிச் சில தடவை செய்தது. இருந்தாலும் கடைசியில் தண்ணீரில் குதித்தது.

இப்படிக் குதித்தவுடன் அதன் உருவமும் மறைந்து விட்டது. இதைப் பார்த்தேன். இதிலிருந்து நான் என்ன புரிந்து கொண்டேன் என்றால்,

" எவ்வளவுதான் பயம் இருந்தால் கூட ஒருத்தன் தைரியமாக காரியத்தில் இறங்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த போதனை அந்த நாயிடமிருந்து எனக்குக் கிடைத்தது.

என்னுடைய மூன்றாவது குரு யாரென்றால் அது ஒரு சின்னக் குழந்தை.

நான் ஒரு சமயம் நகரத்துக்குப் போனேன். அங்கே ஒரு குழந்தை எரியும் மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தது.

நான் அந்தக் குழந்தையைப் பார்த்து வேடிக்கையாகக் கேட்டேன்.

"ஏன் பாப்பா? இந்த மெழுகுவர்த்தியை நீயாகவே கொளுத்தினாயா?" என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றது அந்தக் குழந்தை.

"சரி ,இந்த மெழுகுவர்த்தி முன்பு எரியாமல் இருந்தது. இப்பொழுது எரிகிறது. இந்த மெழுகுவர்த்திக்கு எங்கிருந்து வெளிச்சம் வந்தது என்று எனக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்டேன்.

இதற்கு அந்தக் குழந்தை சிரித்துக் கொண்டு அந்த மெழுகு வர்த்தியை ஊதி அணைத்து விட்டது. அதன் பின் என்னைப் பார்த்துக் கேட்டது.

"இப்பொழுது இந்த மெழுகுவர்த்தியின் வெளிச்சம் போனதைப் பார்த்தீர்கள்ல்லவா... அது எங்கே போனது என்று எனக்குச் சொல்லுங்கள் என்றது.

அந்தக் குழந்தை இப்படிக் கேட்டதும், என்னிடமிருந்த ஆணவம் அழிந்தது. நான் படித்ததெல்லாம் அந்த விநாடியில் சுக்கு நூறாகிப் போனது. எனது முட்டாள் தனத்தை உணர்ந்தேன்" என்று இவ்வளவும் அந்த ஞானி விபரமாகச் சொன்னாராம்.

அதனால் நாம் இன்னாரிடமிருந்து தான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதல்ல.

யாரிடமிருந்தும் எதையும் கற்றுக் கொள்ளலாம். நம்ம ஆள் ஒருத்தன் ஒரு நாய் வளர்த்தான். அந்த நாய்க்கு வால் இல்லை. யாரோ ஏற்கனவே வெட்டி விட்டார்கள்.

"இந்த நாய்தான் சேர், எனக்குக் குரு. அதனிடமிருந்து கூட நான் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"அப்படி என்ன கற்றுக் கொண்டாய் அந்த வாயில்லாத நாயிடமிருந்து?" என்று கேட்டேன்.

"நாம் யாரிடமும் வாலாட்டக்கூடாது என்ற பாடத்தை அதனிடமிருந்து தான் கற்றுக் கொண்டேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருமறைக்கலாமன்றத்தின் முத்தமிழ் சங்கமம் விழாவை முன்னிட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற தமிழ்விழா இவ்வருடம் முத்தமிழ் சங்கமம் என்ற பெயருடன் தமிழ்ப் பண்பாட்டுப் பெறுமானங்களைப் பேணும் முகமாக நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு மாணவரின் ஆக்கத்திறனை விருத்தி செய்ய களம் அமைத்துக் கொடுக்கும் நோக்குடன் போட்டிகள் நடத்தப்படவுள்ளது. அத்துடன் இதில் 16 முதல் 25 வயது வரையானவர்கள் பங்குபற்ற முடியும் என குறிப்பிடப்படுகிறது.

இப்போட்டியில் பேச்சு ,பண்ணிசை , நாடகம் (குழு) என்பன இடம் பெறவுள்ளதுடன் போட்டிகள் யாவும் இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந் துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பேச்சுப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி" தேச வழமை" என்னும் தலைப்பின் கீழ் நடைபெறவுள்ளதுடன் பண்ணிசைப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதியும் நாடகம் "எமது பண்பாட்டைப் பாதுகாப்போம்" என்னும் தலைப்பின் கீழ் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

மேலும் இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பண்ணிசை, நாடகப் போட்டிக்கு தேவையான இசைக் கருவிகளை பயன்படுத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வயதை உறுதிப்படுத்தும் ஏதாவதொரு ஆவணத்தை போட்டிக்கு வரும் போது கொண்டுவரவேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

போட்டியாளர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சனசமூக நிலையத் தலைவர் /செயலாளரின் உறுதிப்படுத்தலுடன், திருமறைக்கலாமன்றம், இல 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# புதிய தொழிற்பயிற்சி ஆரம்பம்

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகாரசபையால் க.பொ.த (உயர்தர) பரீட்சை எழுதிய மாணவர்களின் நன்மை கருதி தேசிய தொழிற்றிறன் சான்றிதழ் (NVQ III) அமைவாக மரத் தொழில்நுட்பம் , கட்டட நிர்மாணம் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கருத்தரங்கும் , ஏற்கனவே தொழில் பயிற்சி மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வு தொடர்பான கருத்தமர்வும் நாளை மறுதினம் காலை 10 மணியளவில் வலிகாமம் , தென்மராட்சி பகுதிகளில் இடம் பெறவுள்ளது. இதில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலிகாமத்தில் சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையத்திலும் தென்மராட்சியில் ஏ 9 வீதியில் அமைந்துள்ள கைதடி தொழிற்பயிற்சி நிலையத்திலும் மேற்படி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ)

# இராசி பலன்

14.09.2010
(ஆவணி 29, செவ்வாய்க்கிழமை)
சப்தமி பின்னிரவு 4.55 மணிவரை
அனுஷம் முன்னிரவு 8.04 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை

**மேடம்** உறவினர்கள் வழியில் சுபவிரயங்கள் அதிகரிக்கலாம்,உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை,அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்** சுற்றத்தாரின் வரவால் சுகம் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்புண்டு.

**மிதுனம்** கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும், தொழிலாளர்களுடன் ஏற்பட்ட பகை அகலும், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்,மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்,மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

**சிங்கம்** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள், தாய்வழி அனுகூலமுண்டு, சேமிப்பு உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், வாகன யோகமுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள் எடுத்த காரியம் கைகூடும், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், பயணம் அனுகூலம் தரும்.

**துலாம்** எதிர்பாராத தனலாபம் உண்டு, பெரியமனிதரின் ஒத்துழைப்பு உண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** விழாக்களில் கலந்து கொண்டு மகிழும் நாள், பணவரவு திருப்தி தரும், நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள்,பயணத்தால் பலன் கிடைக்கும்.

**தனுசு** தாராளமாக செலவிட்டு மகிழ்வீர்கள்,இடமாற்றமுண்டு, நண்பர்கள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படலாம், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் கைகூடும், தொழில்ரீதியாக முன்னேற்றம் காணப்படும்,வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும் நாள், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும், தொழில் ரீதியான திட்டங்கள் நிறைவேறும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்.

**மீனம்** எதிரிகள் விலகுவர்,தொடங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில்ரீதியான பயணம் நன்மை தரும்.

வளவன்

# பேசும் படம்



எந்த வண்டிக்கு...

காட்சி-ஆனையிறவு

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 |
| தக்காளி | 100 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 60 | 45 |
| பூசணி | 40 | 35 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 45 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 40 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 30 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 30 | 20 | 45 |
| கறிமிளகாய் | 80 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 |
| போஞ்சி | 120 | 110 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 25 | 15 | 25 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |



North Lanka IIT யின் இணை நிறுவனமான Isles Internationale Universite இனது 8ஆவது சர்வதேச பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் மற்றும் வெளிநாட்டுப் பட்டதாரிகள், பெற்றோர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் கண்டிய பாரம்பரிய நடனத்துடன் அழைத்து வரப்படுவதையும், IIUவின் பீடாதிபதி மிசேல் கக்ணே உரையாற்றுவதையும் அருகில் IIUஇன் துணைவேந்தர் பீற்றர் சபாட், நிறைவேற்றதிகாரி ஏச்.எஸ்.சன்டு மற்றும் North Lanka IITதலைவர் எஸ்.ஏ.பாலசுப்பிரமணியம், மலேசியா மற்றும் கனடா உயர்ஸ்தானிகர்கள், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் North Lanka IIT யின் கணனிப்பட்டதாரி ஒருவருக்கு பட்டமளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-விஜயகாந்த்)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறமும் , 22 ஆம் திகதி புதன்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-4)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களின் வேதனம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி, தற்காலிக இணைப்பில் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் செப்ரெம்பர் மாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ்.கல்வி வலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வேதனப்பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சமாதான நீதவான்களாக சத்தியப் பிரமாணம்

(நல்லூர்)

நீதி அமைச்சினால் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்ட கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் 11பேர் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி அ.பிறேம் சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

இதில் க.சுந்தரவேல்(பெரிய பொக்கணை வாதரவத்தை புத்தூர்),கெ. காண்டீபன் (டச்சுவீதி, கோப்பாய் -தெற்கு கோப்பாய்), சீ.ராமசாமி (வட்டக்குளம் கட்டப்பிராய் யாழ்ப்பாணம்), இ.விக்னேஸ்வரராஜா (இராச வீதிதோப்பு அச்சுவேலி), சு.சுப்பிரமணியம் ( இராசவீதி நீர்வேலி வடக்கு நீர்வேலி), கு.பூபாலசிங்கம்(திருவேங்கடம் அச்சுவேலி வடக்கு அச்சுவேலி), த.திருநாவுக்கரசு (உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்), க.நாகரத்தினம் (கதிர்காமர் கோவிலடி நீர்வேலி வடக்கு நீர்வேலி), நா. சண்முகரத்தினம் (வைரவர் கோவிலடி புத்தூர் வடக்கு), அ. கந்தசாமி(கதிரிப்பாய் அச்சுவேலி), தி. அருட்பிரகாசம் (கைத்தொழில் பேட்டை வீதி அச்சுவேலி) ஆகியோர் சமாதான நீதவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர். (ஸ்ரீ-2-7-134)

## திணைக்களத் தலைவர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல திணைக்கள தலைவர்களுடனான முன்னேற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று காலை 11 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)




## பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல்வகைகள் எதிர்வரும் 20 ஆம்திகதி திங்கட்கிழமை மதியம் ஒரு மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளதென சாவகச்சேரி நீதவான் நீதிமன்றப் பதிவாளர் வீ.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மாணவ முதல்வர்களுக்கான செயலமர்வுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ முதல்வர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமையும் மற்றும் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் யாழ்.புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை பெண்களுக்கான செயலமர்வும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆண்களுக்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளதுடன் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 3 மாணவர்கள் பங்குபற்றுவதோடு முன்பு இச் செயலமர்விற்கு பங்குபற்றாத மாணவர்களாகவும் இருத்தல்வேண்டும் என வடமராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-19)

# புதிய குழந்தைகள் விடுதி கையளிக்கும் வைபவம்



(யாழ்ப்பாணம்)

Foundation for Internatinal Development Relief நிறுவனத்தின் உதவியுடன் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய குழந்தைகள் விடுதி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வைபவரீதியாக கையளிக்கப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜப்பான் நிதி வழங்குநர் செல்வி சுமினோ காறா, FIDR முகாமைத்துவப் பணிப்பாளர் றோபுகிகோ இக்காவா, வடமா காண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், FIDR குழுத்தலைவர் கொட்டாறோ இக்சிகாவா, FIDR நிகழ்ச்சித்திட்ட அலுவலர் செல்வி யுகிகோ நாசுனோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, யாழ். கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன்,சேவாலங்கா மன்ற உபதலைவர் திருமதி லக்சி அபயசேகரா ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (ஸ்ரீ-2)

# SEEDO நிறுவனத்தினால் புதிய தொழிற்பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினால் SEEDO ''உழைப்போம் வறுமையை ஒழிப்போம்'' என்னும் கருப்பொருளை மையமாக வைத்து அனைவருக்கும் தொழிற்கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் வயறிங் றீவைண் டிங் , தையல் இயந்திரம் திருத்துதல், கேக் ஐசிங் தயாரித்தல், ஆண், பெண்களிற்கான தையல். பெண்களிற்கான அழகுக்கலைப் பயிற்சி , கழிவுப் பொருட்களில் அலங்காரப் பொருட்கள் உற்பத்தி , கணனிப் பயிற்சி , சாரதிப் பயிற்சிகள் ஆகிய புதிய பயிற்சிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளம்.

இதில் இணைய விரும்புவோர் இல. 249 , நாவலர் வீதி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தில் உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# நடமாடும் மருத்துவ சேவையும் அவசர அம்புலன்ஸ் சேவையும்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீள்குடியேறும் மக்களுக்காக நடமாடும் மருத்துவ சேவை ஒன்று செம்பியன்பற்று பாடசாலையிலும் உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இம் மக்களிற்கான அவசர அம்புலன்ஸ் சேவையை வழங்குவதற்காக குடத்தனையிலும் மருதங்கேணியிலும் இரு அம்புலன்ஸ் வண்டிகள் 24 மணி நேரமும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது அவசர மருத்துவ தேவைகளின் போது 24 மணி நேரமும் தொலைபேசி இலக்கங்களூடாக இந்த அம்புலன்ஸ் வண்டிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கமைய குடத்தனைக்கு 021-3207150 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் மருதங்கேணிக்கு 021-3213580 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கு- கிழக்கு மக்களுக்கான பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு சான்றிதழ் வழங்கும் பணி இவ் வருட இறுதியில் நிறைவுறும்

## பதிவாளர் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களுக்கு தேவையான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு சான்றிதழ்களை வழங்கும் பணி இந்த வருட இறுதிக்குள் நிறைவுக்கு வரும் என்று பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு இந்த சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

நடமாடும் சேவையாக இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இம் மாதம் முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட நடமாடும் சேவையில் கூடுதலான மக்கள் கலந்து கொண்டதாக பதிவாளர் ஆணையாளர் ஜி.எம். குணசேகர தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவைக்கு நிதி அமைச்சு நிதி உதவிகளை வழங்கியதாகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் ஒத்துழைப்பும் இதற்காகப் பெறப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-7)

# 18 நாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுகின்றன

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத்தை முடிபுக்கு கொண்டு வந்துள்ளபோதிலும் 18 நாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரை யாற்றிய போதே பிரதமர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் 18 நாடுகளிலுள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்திற்கெதிராக செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அவர்கள் இலங்கையை பிரித்து தனியான இராச்சியம் ஒன்றை உருவாக்குவதற்கான திட்டமொன்றை முன்னெடுத்து வருவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

18 பேராசிரியர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# புலம்பெயர்ந்த தமிழ் தம்பதிகள் மத்தியில் விவாகரத்து அதிகரிப்பு

## ஆய்வில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புலம் பெயர்ந்த தமிழ் தம்பதிகள் மத்தி யில் விவாகரத்து சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தகவலொன்று வெளியாகியுள்ளது.

பிரித்தானியா உட்பட மேற்கத்தேய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பிலான விவாகரத்து வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை கணவன்-மனைவிக்கிடையில் புரிந்துணர்வு இல்லை மற்றும் ஏனைய பிற காரணங்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தமிழ் கலாசாரமும் மேற்கத்தேய கலாசாரத்திற்கும் இடைப்பட்ட ஒரு வாழ்க்கையே இவ்விவாகரத்திற்கான காரணம் என ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டிலுள்ள அல்லது இலங்கையிலுள்ள ஆணோ பெண்ணோ திருமணம் செய்யும் போது அவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் தகவல்கள் என்பன தெரிந்திருப்பதில்லை என்றும் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

# 50 ஆபாச இணையத்தளங்கள் குறித்த விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

50 ஆபாச இணையத்தளங்கள் தொடர்பாகப் பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் இந்த இணையத் தளங்களைத் தடைசெய்வதற்கான உத்தரவு பெறப்படவுள்ளது.

இதற்கு முன்னர் ஆபாசக் காட்சிகள் உள்ளடக்கப்பட்ட 81 இணையத்தளங்கள் உள்ளிட்ட 184 இணையத்தளங்கள் தொடர்பாக பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய அவை தடை செய்யப்பட்டுள்ளன.

குறித்த உள்நாட்டு இணையத்தளங்களில் ஆபாசக் காட்சிகளில் தோன்றும் இளைஞர், யுவதிகள் தொடர்பாகத் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# சுவிஸில் அதிக குற்றம் செய்வோரில் இலங்கைத் தமிழர்களும் முன்னணியில்!

சுவிற்சர்லாந்தில் குற்றச் செயல்களில் அதிகம் ஈடுபடுகின்ற குடியேற்றவாசிகள் பட்டியலில் இலங்கைத் தமிழர்களும் முன்னணியில் இருக்கின்றார்கள் என்று ஆய்வு ஒன்றின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுவிஸின் புள்ளி விபரத் திணைக்கள நிபுணர் குழுவினர் முதன்முறையாக அங்குள்ள வெளிநாட்டவர்களின் குற்றச் செயல்கள் சம்பந்தமாக ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளனர்.

அவர்கள் கடந்த வருடம் 18 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்ட குடியேற்றவாசிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த குற்றச் செயல்கள் சம்பந்தமான பொலிஸ் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

அங்கோலா, நைஜீரியா, அல்ஜீரியா, ஐவரி , கோஸ்ற், டொமேனியன் குடியரசு ஆகிய நாட்டவர்களுக்கு அடுத்தபடியாக இலங்கைத் தமிழர்கள் அங்கு குற்றச்செயல்களில் அதிகம் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று இவ்வாய்வின் முடிபு தெரிவிக்கின்றது.

சுவிற்சர்லாந்தினரைக் காட்டிலும் 4.7 மடங்கு அதிகமாக இலங்கைத் தமிழர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# மன்னிப்பு கேட்காவிட்டால் ஐதராபாத்தை விட்டு விரட்டுவோம்

## சிரஞ்சீவிக்கு சந்திரசேகரராவ் கண்டனம்

(ஐதராபாத்)

நடிகர் சிரஞ்சீவியை ஐதராபாத்தை விட்டு விரட்டி அடிப்பேன் என்று தெலுங்கானா ராஷ்டீரிய சமிதித் தலைவர் சந்திரசேகரராவ் கூறியருப்பது ஆந்திர அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரஜா இராச்சியம் கட்சித் தலைவரான நடிகர் சிரஞ்சீவி சில தினங்களுக்கு முன்பு தெலுங்கானா பகுதியில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போது சந்திரசேகரராவ் தமது புதிய படங்களை திரையிடுவதற்காக பட தயாரிப்பாளர்களிடம் இருந்து பத்து கோடி ரூபாய் வரை வசூல் செய்து வருவதாகவும் பணம் தர மறுத்தால் அப்படம் வெளியாகும் திரையரங்குகளில் ரவுடிகளை வைத்து கலவரம் செய்வதாக மிரட்டுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். இது கண்டிக்கத்தக்க செயல் என்றும் சிரஞ்சீவி கூறினார்.

இந் நிலையில் ஐதராபாத்தில் நடந்த தெலுங்கானா ராஷ்டீரிய சமிதி ஆலோசனை கூட்டத்தில் சந்திரசேகரராவ் பேசிய போது, நடிகர் சிரஞ்சீவி பட அதிபர்களிடம் பணம் கேட்டு மிரட்டி வருவதாக தம் மீது பொய் குற்றச்சாட்டுக்களைக் கூறி வருவதாகவும் இதற்கு அவர் தன்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இல்லாவிடில் அவர் ஐதராபாத்தை விட்டு விரட்டப்படுவார் என்றும் கூறியுள்ளார். இது ஆந்திர அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஸ்ரீ-2)



# ஐ.தே.க. எம்.பிக்களின் தீர்மானம் குறித்து ரணிலுக்கு தெரியாதாம்



(கொழும்பு)

தனது கட்சியின் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனக் குழுவாக செயற்படப்போவது குறித்து தனக்கு எவரும் அறிவிக்கவில்லை என ஐ.தே.க .தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஐ.தே.க.வின் 25 எம்.பிக்கள் சுயாதீனமாக செயற்படப் போவதாக ஊடகங்களில் பல செய்திகள் வெளிவந்தன. அத்தகைய முயற்சி குறித்து எவரும் எனக்கோ சபாநாயகருக்கோ அல்லது எதிர்க்கட்சிப்பிரதம கொறடாவுக்கோ அறிவிக்கவில்லை.

பெயர் குறிப்பிடப்பட்ட பல எம்.பி.க்கள் தாம் அத்தகைய எண்ணத்தை கொண்டிருக்க வில்லை என தெரிவித்துள்ளனர் என ரணில் விக்கிரமசிங்க கூறினார். இது குறித்து தெரிவிக்கப்பட்டால் அவ் விடயம் செயற் குழுக்கூட்டத்தில் ஆராயப் படும் எனவும் எதிர்வரும் நாட்களில் தான் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை சந் திக்கவுள்ளதாகவும் ரணில் கூறினார். (ஸ்ரீ-2)

# யாழ். மாவட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவ்வருடத்திற்கான தனது வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலும் பல அபிவிருத்தி திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதில் உடுப்பிட்டி பொக்கல வீதி திருத்த வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வரணி இடைக்குறிச்சி முதல் கரம்பை குறிச்சி வரையான வீதி திருத்த வேலைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாவும், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் கட்டட திருத்த வேலைகளுக்கு 2 இலட்சம் ரூபாவும், தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை கட்டட திருத்த வேலைகளுக்கு 2 இலட்சம் ரூபாவும், சரசாலை வடக்கு ஸ்ரீ கணேஷா வித்தியாலய கட்டட திருத்த வேலைகளுக்கு 2 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய கட்டட திருத்த வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கரவெட்டி யாக்கரை விநாயகர் வித்தியாலய கணனி மற்றும் பிறிண்ட் இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு போட்டோ கொப்பி இயந்திர உபகரணம் மற்றும் தளபாடம் ஆகியன வழங்குவதற்கு 2 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு சங்கீத உபகரணம் வழங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும், ஆனைக்கோட்டை குணபாலன் வித்தியாலயத்திற்கு போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வேலணை நாகேஸ்வரி வித்தியாலயத்திற்கு போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சரசா்லை நுணாவில் பிள்ளையார் ஆலய கட்டடதிருத்த வேலைகளுக்காக 2 இலட்சம் ரூபாவும், கிளிசெநாச்சி திருநகர் வடக்கு அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாடம் வழங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும், உயரப்புலம் பாரதி அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாடம் வழங்குவதற்கு 50 ஆயிரம் ரூபாவும், நவாலி சென் பீற்றர்ஸ் அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாடம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தச்சன் தோப்பு ஸ்ரீ முருகன் ஆபிவிருத்தி சங்கத்தின் கட்டடத்திருத் வேலைகளுக்கு ஒரு இல்ட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கரவெட்டிசிந்தாமணி விநாயகர் அபிவிருத்தி சங்கத்தின் தளபாட திருத்த வேலைகள் மற்றும் தளபாடம் வழங்குவதற்கு ஒரு இட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், உடுப்பிட்டி கண்ணமலை வீதி திருத்தல் வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சுதுமலை தமிழ் கலவன் பாடசாலையின் கட்டட திருத்த வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தாக செயலாளர் சோ. சந் திரசேகரம் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-4)


**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் கல்விக் கண்காட்சியும் சாகச நிகழ்வுகளும் - 2010**

**"மாணவர் மகிழ்களம்"**

- பாட ரீதியான புத்தாக்க படைப்புகளும் முன்வைப்புகளும்
- கல்வி,தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.
- சாகச நிகழ்வுகள் : ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஒட்டம், வட்டக் கூட்டினுள் ஒடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட், பலூன் துள்ளல், மந்திர வித்தைகள்.

இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்

காலம் : 16 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2010 வரை கல்விக்கண்காட்சியும்
16 தொடக்கம் 21 செப்ரெம்பர் 2010 வரை சாகச நிகழ்வுகளும்

கல்விக் கண்காட்சி : இலவசம் (காலை 8.00மணி - மாலை 4.00 மணி வரை)

சாகச நிகழ்வுகள் : நுழைவுச்சீட்டு மாணவர்களுக்கு 30/-, ஏனையோருக்கு - 50/- (காலை 8.00 மணி - இரவு 10.00 மணி வரை மாணவர்களும், பொது மக்களும் பார்வையிடலாம்).

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(இ) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


# இத்தாலியில் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இத்தாலிய அரசாங்கம் வழங்கும் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கையை 7 ஆயிரத்து 500 வரை அதிகரிப்பது தொடர்பில் அந்த நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இத்தாலிய அரசாங்கம் இலங்கையர்களுக்கு 3 ஆயிரத்து 500 தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அந்த நாட்டின் இலங்கைத்தூதுவர் ஜனாதிபதி சட்டத்தரணி கேமந்த வர்ணகுலசூரிய குறிப்பிட்டார்.

இதேவேளை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைப் பணியாளர்கள் தற்போது இத்தாலியில் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருவதாகவும் இவர்களுக்கு சமமான எண்ணிக்கையை கொண்டவர்கள் அந்த நாட்டில் சட்ட விரோதமாக தங்கியுள்ளதாகவும் ஜனாதிபதியின் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# பாணின் விலையை அதிகரித்து மக்கள் மீது மேலும் ஒரு சுமையை சுமத்தியுள்ளது அரசு

## தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் விசனம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவின் சுமை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நிலையில் பாணின் விலையை அதிகரித்திருப்பதன் மூலம் மக்கள் மீது அரசாங்கம் மேலும் ஒரு அழுத்தத்தை பிரயோகித்துள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் விசனம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் போது அதனை நியாயப்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் கூறப்படுகின்ற காரணங்கள், கருத்துக்களை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் முன்னாள் எம்.பியுமான கே.டி.லால்காந்த மேலும் கூறியிருப்பதாவது, கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் பாண் ஒரு இறாத்தலின் விலை அரசாங்கத்தினால் மேலும் 3 ரூபாவினால் அதிகரித்திருக்கின்றது.

வாழ்க்கைச்செலவுப்புள்ளி 220 ஆக உயர்ந்துள்ள நிலையில் சாதாரண குடும்பம் ஒன்றின் மாதச்செலவு சராசரியாக 40 ஆயிரத்தை எட்டி நிற்கின்றது. எனினும் அரசாங்கம் உறுதியளித்ததன் பிரகாரம் சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை.

இந்த நாட்டில் உள்ள அனைத்துத் துறைகளையும் சார்ந்த உழைக்கும் வர்க்கத்தினரும் சம்பள உயர்வை எதிர்பார்த் திருக்கின்ற போதிலும் அதனை நிறைவேற்று வதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து விட்டு அதற்காகக் கூறப்படுகின்ற காரணங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி இவ்வாரம் நியூயோர்க் பயணம்

(கொழும்பு)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாரம் நடுப்பகுதியில் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை யகத்தில் நடைபெறவிருக்கின்ற ஐ.நா.வின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்ய விருக்கின் றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உச்சிமாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 22 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவிருக்கின்றது. இந்த மாநாட்டில் ஈ மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

ஐக்கிய நாடுகளின் 65 ஆவது பொதுச் சபை அமர்வுகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன. எதிர்வரும் 20 ஆம் திகதி சா்வதேச நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு நடைபெறும். அந்த மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவார். (ஸ்ரீ-2)

# அணுவைக் கண்டறியும் சக்தி வாய்ந்த நுணுக்குக்காட்டி

## பிரித்தானிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மிக நுண்ணிய உயிரினங்களைக் கண்டறிய நுணுக்குக்காட்டி பயன்படுத் தப்பட்டு வந்தது. தற்போது அணுவைக்கூட கண்டறியும் வகையில் சக்தி வாய்ந்த நுணுக்குக்காட்டியை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்த புதிய இலத்திரன் நுணுக்குக்காட்டியை தயாரித்துள்ளனர்.

தனித்தன்மை வாய்ந்த இந்த நுணுக்குக்காட்டிக்கு எப்.ஈ.ஐ.டைடான் 3 இலத்திரன் நுணுக்குக்காட்டி என பெயரிட்டுள்ளனர். எந்த வித அணுவையும் கண்டு பிடித்து அதைப் பிரித்தெடுக்க முடியும்.

மிகச் சிறியதான காபன் அணுவையும் கண்டறிந்து பிரித்தெடுக்க முடியும். குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் மனித உரோமத்தை விட 10 இலட்சம் மடங்கு மிகச் சிறியதாகவுள்ள அணுவையும் பிரித்தெடுக்க இயலும்.

இந்த நுணுக்குக்காட்டி மூலம் அல்சமீர்ஸ்,பார்க்கின்சன்ஸ் போன்ற விநோத நோய்களை கண்டறிவதற்கான சோதனையிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# மாங்குளத்தில் மரக்கடத்தல்

சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட மரக்குற்றிகள் சிலவற்றை வவுனியா மாங்குளப் பகுதியில் வைத்துப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மரங்களைக் கடத்திச் சென்ற லொறியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மரண அறிவித்தல்கள்

### மிக்கேல் மரியரெத்தினம் (யோகமணி)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் மரியரெத்தினம் (யோகமணி) கடந்த வியாழக்கிழமை (09.09.2010) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் மிக்கேலின் அன்புமனைவியும் காலஞ்சென்ற மிக்கேல் யேசுதாசன் மற்றும் டாக்டர் மிக்கேல் தூயமணி (அமெரிக்கா), மிக்கேல் முத்துக்குமார்(மார்ஷல் வீடியோ), காலஞ்சென்ற மிக்கேல் புலேந்திரன் மற்றும் யேசுதாசன் வசந்தமாலை (பிரான்ஸ்), ஜெயக்குமார் முத்துராணி, காலஞ்சென்றவர்களான மிக்கேல் தயாளன், ஜெயக்குமார் சோதிமலர் ஆகியோரின் அன்புத்தாயும் யேசுதாசன் ஜசோதா, தூயமணி நிரஞ்சினி, முத்துக்குமார் மஞ்சு, சிங்கராயர் யேசுதாஸ், எசக்கியர் ஜெயக்குமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (13.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ்.புனித கொஞ்சோஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்

இல.02, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்,
0771896628 முத்துக்குமார் (இலங்கை)
7182062769 தூயமணி (அமெரிக்கா)
0622455131 யேசுதாஸ் ( பிரான்ஸ்)

(சி-1054)

### திருமதி வள்ளியம்மை செல்வராசா
(ஓய்வுபெற்ற மருத்துவபரிசாரகி-மறவன்புலோ)



மறவன்புலோ மேற்கு, தோப்பைப் பிறப்பிடமாகவும் 51/33A, Swarna Road, Wellawatte யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை செல்வராசா கடந்த (11.09.2010) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம், புஸ்பராணி காலஞ் சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனதாரணி, தவநேசன், சுபநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீரவீந்திரா, யசிந்தா, சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரணிஜா, லக்ஷியன், மெலிசா, மிகேல், அகிசா, சானு, ஆதூர்ஸ், விதுர்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாய் வீதி, மூளாய் சுழிபுரத்தில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நேற்று (13.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்

மூளாய் வீதி, முளாய்,
சுழிபுரம்.
T.P:- 021-3210686

(சி-1055)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடமைப்பு கடனுதவி

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக இலங்கை வங்கி ஊடாக எதிர்வரும் காலங்களில் கடன் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினாலும் இந்தியாவின் உதவியுடன் நிர்மாணித்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 50 ஆயிரம் வீடுகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு போதுமானதாக இருக்காது எனவும் அத்துடன் இவற்றை அமைத்துக்கொடுக்க நீண்ட காலம் எடுக்கும் என்பதால் மேற்படி கடனுதவித் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இடம் பெயர்ந்தவர்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் தற்போதுள்ள வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கும் இந்தக் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்ள வழிசெய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வங்கி இந்தத் திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் இடம்பெயர்ந்தவர்களுக்கு இந்தக் கடனுதவி 4 வீத வருடவட்டி அடிப்படையில் 10 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தும் வகையில் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் டியூ குணசேகர தகவல் வெளியிட்டார். (ஸ்ரீ-2)

# அரச உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுடனான சந்திப்பொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சந்திப்பில் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரை யாடவுள்ளதால் கிளிநொச்சியில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-7-10)

# ஒட்டுசுட்டான் செங்கல் உற்பத்தித்துறையை மேம்படுத்துவற்கு அரசு நடவடிக்கை

ஒட்டுசுட்டான் செங்கல் உற்பத்தியை இரட்டிப்பாக்கி அதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

செங்கல் உற்பத்தித் துறையை துரிதமாக மேம்படுத்தும் பொருட்டு ஐம்பது தொழிலாளர்களை உடனடியாக இணைத்துக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானிலுள்ள செங்கல் உற்பத்தி சூளையை சென்று பார்வையிட்ட ஆளுநர் அதன் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளார்.

தற்பொழுது நாளொன்றுக்கு 8ஆயிரம் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் 23 தொழிலாளர்களே சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வட மாகாணத்தில் இந்திய அரசின் உதவியுடன் 50 ஆயிரம் வீடுகளை கட்டும் பணிகளுக்கு இங்கிருந்தே செங்கற்களை பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக ஆளுநர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# வவுனியா மாவட்டத்தில் கடும் வரட்சி

கடந்த சில மாதங்களாக வவுனியா மாவட்டத்தில் மழை பெய்யாதிருப்பதால் கடும் வரட்சி நிலவுகின்றது.

நகர்ப்பகுதி உட்பட கிராமப் புறங்களான தேக்கவத்தை, தோணிக்கல், கிடாச்சூரி, கல்மடு உட்பட பல பிரதேசங்களில் கிணறுகளில் நீர் வற்றிய நிலையில் மக்கள் குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை பாடசாலைகளில் நீர் இன்மையால் மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதுடன் பம்பைமடு ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் வவுனியா சிறைச்சாலையிலும் நீர் இன்மையால் மாற்றொழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமைக்கு வவுனியாவில் உள்ள குளங்களை தூர்த்து மண் நிரப்பி வீடுகள் அமைக்கப்பட்டமையினால் குளங்களில் நீரேந்து பிரதேசங்கள் குறைவடைந்தமையும் காரணம் எனத் தெரிவிக்கப்படுவதுடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் வவுனியா மாவட்டத்தில் அதிகளவில் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகள் காரணமாகவும் நிலத்தடி நீர் வற்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு கணனி தொழில் நுட்பப் பயிற்சி

(கொழும்பு)

வவுனியாவில் புனர்வாழ்வுபெற்றுவரும்முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு கணனி பயிற்சிகளை வழங்கி அவர்களின் தொழில்நுட்ப அறிவையும் திறனையும் மேம்படுத்த புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பூந்தோட்டம் மற்றும் பம்பைமடு புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு இப்பயிற்சியானது முதற்கட்டமாக வழங்கப்படுகின்றது.

இப்பயிற்சி வகுப்புக்கள் இலங்கை வர்த்தக மற்றும் கைத் தொழில் அமைப்பினர் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் 60 பேர் கலந்து கொண்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவர்களுக்கு உயர் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புலிகளின் கப்பல் வலையமைப்புடன் தொடர்புடைய இளங்கோவனின் பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச கப்பல் வலையமைப்பின் முக்கியஸ்தராகக் கருதப்படும் முத்துசாமி இளங்கோவனின் பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

புலிகளின் கப்பல் வலையமைப்புடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் இளங்கோவனை பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

இதன்படி குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக குடிவரவு குடியகல்வுத் திணைக்கள சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிணையில் விடுதலை செய்யுமாறு இளங்கோவனின் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (ஸ்ரீ-2)

# கனேடிய தமிழ் காங்கிரஸ் அலுவலகம் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது

கனேடியத் தமிழ் காங்கிரஸ் தலைமைக் காரியாலயம் உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனடாவின் ரொரன்ரோவில் அமைந்துள்ள கனேடியத் தமிழ் காங்கிரஸின் தலைமைக் காரியாலயம் உடைக்கப்பட்டு முக்கிய தகவல்கள் அடங்கிய கணனிகள் களவாடப்பட்டுள்ளன.

அண்மையில் கனடாவிற்குள் பிரவேசித்த புகலிடக் கோரிக்கையாளர்களின் பெயர் விபரங்கள் உள்ளிட்ட முக்கிய தகவல்கள் இந்த கணனியில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலைவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தலைமைக்காரியாலத்திற்குள் பிரவேசித்த நபர்கள் ஆவணங்களைச் சேதப்படுத்தியுள்ளதாக காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

களவாடப்பட்டுள்ள கணனியில் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் பற்றிய தகவல்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சன் சீ கப்பல் விவகாரத்தில் தொடர்புபட்ட காரணத்தினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு தொடர்பிருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது அமைப்பை விரும்பாத சிலர் இதனை மேற்கொண்டிருப்பதற்கான சாத்தியங் களும் காணப்படுவதாக அவர் தெரிவித் துள்ளார்.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்க வேண்டாமென தமக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக டேவிட் பூபாலபிள்ளை தெரிவித்துள்ளார்.

களவாடப்பட்ட கணனித் தகவல்களைக் கொண்டு புகலிடக் கோரிக்கையாளர்களின் இலங்கை சொந்தங்களின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் என எச்சரிக்கை வித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து கனேடியப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைக்கான பஸ்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைக்கான பஸ்சேவையை மீண்டும் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்க பருத்தித்துறையிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது அங்கு மீள் குடியேற்றம் நடைபெற்று வருவதால் அப்பகுதி மக்களின் போக்குவரத்து நலன்கருதி இச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் காலையில் ஒரு சேவையும் பிற்கலில் ஒரு சேவையும் அத்துடன் குடத்தனை மற்றும் மருதங்கேணி ஊடாக ஆழியவளை பகுதிக்கு பஸ்சேவை நடைபெறவுள்ளது என சாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

குறிப்பாக பல வருடங்களின் பின்பு இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-7-10)

# எதுவித அடிப்படை வசதியுமின்றி மக்களை குடியமர்த்தல் மீள் குடியேற்றமாகாது

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழர்கள் தமது சொந்த நாடு என உணரக் கூடிய சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எங்கள் நாடு எங்கள் தேசம் என்ற உணர்வு தமிழர்களுக்கு ஏற்படக் கூடிய வகையில் அரசாங்கம் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களை மிருகங்களைப் போன்று எந்த விதமான அடிப்படை வசதியுமின்றி குடியமர்த்துவது மீள் குடியேற்றமாக கருதப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீள் குடியேற்றப்பட்ட மக்கள் வாழ்வாதாரமின்றி அல்லலுறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மூன்று இலட்சம் பேர் 14 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகளை விடுவதனால் பயனில்லை என சுட்டிக்காட்டிய அவர், சில கூரைத் தகடுகளையும் சில பலகைகளையும் கொடுப்பதன் மூலம் மக்கள் மீண்டும் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாதென தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு செல்லும் தெற்கு மக்கள் சுற்றுலாவாகவே செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை அளிக்க வேண்டியது அவசியமானது எனவும் அல்லது மீண்டும் பயங்கரவாதம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அவர் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு ஏற்படவில்லை எனவும் கட்சிக்குள் சில கருத்து முரண்பாடுகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



புதிய அரசியலமைப்புத் திருத்தங்களின் மூலம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறப்பு கருத்தமர்வுகள்

சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் திருவிழா கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியுமாலை 5.30 மணிக்கு நவநாள் வழிபாடும் நடைபெற்று வருகின்றது.

இத்திருவிழாவை முன்னிட்டு தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெற்று வரும் சிறப்புக் கருத்தமர்வில் இன்று செவ்வாய்க்கிழமை "மரியாளின் உடனிருப்பு" ,நாளை புதன்கிழமை "மரியாளின் புதுமைகள்'' ,நாளை மறுதினம் வியாழக்கிழமை "மரியாளின் நம்பிக்கை" என்னும் தலைப்புக்களிலும் மற்றும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை "நற்கருணையே இயேசு", மறுநாள் சனிக்கிழமை "திருநாள்" என்னும் தலைப்புக்கள் பற்றி கருத்தமர்வு இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-4)

# இறுவட்டு வெளியீடு

(பருத்தித்துறை)

வடமராட்சி வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய மஹோற்சவ காலத்தில் நடைபெற்ற தெய்வீக பேருரை இறுவட்டினை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வெளியிட்டு வைத்தார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு நடைபெற்ற பூங்காவன உற்சவத்தின் போது இவ் இறுவட்டு வெளியிடப்பட்டது. (ஸ்ரீ-7-10)

# சுயாதீனமாக இயங்கவுள்ள ஐ.தே.க.வினரை ஐ.தே.கூ.உடன் இணைந்து கொள்ள கோரிக்கை



(கொழும்பு)

இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விமர்சனம் செய்வதனை விடவும் அவருக்கு ஆதரவளிப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் கடமையாக அமைய வேண்டுமென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ள வேண்டுமென கட்சியின் பிரதித் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழு ஜனநாயத் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டால் சரத் பொன்சேகா எதிர்க்கட்சித் தலைவராக உருவாகக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அண்மையில் வெளியிட்டிருந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய கட்சிகளை விமர்சிப்பதனை விடவும் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் நிலவி வரும் உட்பூசல் நிலைமைகளுக்கு தீர்வு காண்பதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அதிகம் சம்பாதிப்பதற்காக வளமான நாடுகளுக்கு செல்வோர் சந்தோஷமாக உள்ளனரா?

(லண்டன்)

அதிகமாக சம்பாதித்து சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் சொந்த நாடுகளை விட்டு வளமான நாடுகளுக்கு செல்வோர் உண்மையில் அப்படி சந்தோஷமாக இருக்கின்றனரா என்று ஓர் ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது.

ஆய்வின் முடிவின் படி எதிர்மறையாகத் தான் அமைந்தது.

நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் உள்ளவர்கள் பிரிட்டன், அமெரிக்கா போன்ற வளமான நாடுகளுக்குச் சென்று தங்கள் திறமைக் கேற்ப அதிகளவில் சம்பாதித்து அதன் மூலம் வாழ்வில் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று அந் நாடுகளுக்குச் செல்கின்றனர்.

சொந்த நாடுகளிலிருந்து அயல் நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து செல்வோரின் வாழ்க்கை சந்தோஷகரமானதாக இருக்கிறதா அல்லது அவர்கள் சென்ற நாட்டில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனரா என்று சமீபத்தில் ஓர் ஆய்வு நடந்தது.

பொருளாதார புலம் பெயர்வும் மகிழ்சியும் தாயகத்தினர் மற்றும் குடியேறுவோருக்கு இடையிலான ஓர் ஒப்பீடு என்ற தலைப்பில் பிரிட்டனைச் சேர்ந்த சமூகவியலாளர் டேவிட் பார்ட்ராம் என்பவர் இந்த ஆய்வை நடத்தினார்.

மொத்தம் ஆயிரத்து 400 பேர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். ஆய்வின் இறுதியில் குடியேறுவோர் தாங்கள் எதிர்பார்த்தபடி மகிழ்ச்சியாக இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

இது குறித்து டேவிட் கூறுகையில்,

அதிகளவில் சம்பாதிப்பதால் மகிழ்ச்சி கிடைத்து விடும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு தவறானது என்பதை தான் இந்த ஆய்வு நமக்கு காட்டுகிறது.

அயல் நாடுகளிலிருந்து வளமான நாடுகளுக்கு குடியேறியவர்களில் பெரும்பாலானோர் மனச் சோர்வுடன் தான் உள்ளனர். புலம் பெயர்ந்தோர் அதிகளவில் சம்பாதித்தாலும் தங்கள் உறவுகளை அவர்களால் முழுமையாகப் பேணிக் கொள்ள முடிவதில்லை. அதனால் சொந்த நாட்டுக்காரர்களை விட அந்த நாட்டில் குடியேறியவர்கள் மிகவும் குறைவான அளவிலேயே மகிழ்ச்சி அடைகின்றனர்.

தற்போதைய நிலையை விட அதிகமாகச் சம்பாதித்தால் மகிழ்ச்சியாக வாழலாம் என்று நினைத்துத் தான் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

ஆனால் அங்கு சென்றவுடன் மேலும் அதிகமாகச் சம்பாதித்தால் தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்ற நிலை உருவாவதும் இதற்கு ஒரு காரணம். சம்பாத்தியத்துக்கு ஏற்றாற்போல விருப்பங்களும் அதிகரித்து விடுகின்றன.

நம்மில் பெரும்பாலோர் மகிழ்ச்சியை விட பணத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம். இந்த ஆய்வும் அது புலம் பெயர்வோர் விடயத்தில் சரி தான் என்பதை காட்டுகிறது. ஆனால் வளமான ஒரு நாட்டில் வந்தேறியாக வாழ்வது என்பது மிகவும் கடினமானது என்று டேவிட் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பரீட்சைகள் காரணமாக மாணவ,மாணவியருக்கு கடும் உடல், உளரீதியான அழுத்தங்கள்

## மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

பரீட்சைகளின் காரணமாக மாணவ, மாணவியர் கடும் உடல் மற்றும் உள ரீதியான அழுத்தங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசிய ரீதியாக இலங்கையில் நடத்தப்படும் பரீட்சைகளின் போது மாணவர்கள் கடுமையான உள மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பரீட்சை வினாத்தாள்கள் தனிப்பட்ட மாணவ, மாணவியரின் திறமைகளை சோதிக்கும் வகையில் அமையப் பெற வில்லை எனவும் அவை மிகவும் சிக்கல் மிகுந்ததாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரசாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் இவ்வாறான ஓர் நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகின் ஏனைய நாடுகளில் நடைபெறும் பரீட்சை முறைமைகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையின் பரீட்சை முறைமை மிகவும் கடினமானதென மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நரம்பியல் நிபுணர் டாக்டர் பிரசன்ன குணசேன, நரம்பியல் டாக்டர் நிலுபுல் பெரேரா, சிறுவர் நல டாக்டர் அஜித் பெரேரா, டாக்டர் ஷிராந்தி பெரேரா, சிறுவர் நல மருத்துவர் பிரசன்ன லியனகே ஆகியோரினால் இந்த பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அழுத்தங்களினால் உடலியக்கத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது ஐந்தாம் தரத்தில் நடைபெற்று வரும் புலமைப் பரீட்சை ஏழாம் தரத்திற்கு மாற்றப்பட வேண்டுமென மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இலங்கையில் சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் லண்டன் சாதாரண தர, உயர் தரப் பரீட்சைகள் உள்ளிட்ட உலகின் ஏனைய பரீட்சைகளை விடவும் கடினமான வினாத்தாள்களுக்கு பதிலளிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரீட்சை நடாத்துதல் குறித்து விரிவாக ஆராயப்பட்டு சரியான முறையில் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில வினாக்களுக்கு ஆசிரியர்களினாலேயே சரியான முறையில் விடையளிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவினரால் நடத்தப்பட்ட ஆய்விற்கு மருத்துவர்கள் அளித்த அறிக்கையில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கமும் பணமும் வங்கிகளில்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் மற்றும் பணம் ஆகியன வங்கிகளில் ஒப்படைக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

200 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டதாகவும் அந்த தங்கத்திற்கு என்ன நேர்ந்ததென்பது இதுவரையில் அம்பலமாகவில்லை எனவும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா அண்மையில் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

மீட்கப்பட்ட தங்கம் மற்றும் பணம் ஆகியன துஷ்பிரயோகம் செய்யப்பட வில்லை என இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில தனிப்பட்ட இராணுவவீரர்கள் தங்கம் மற்றும் பணத்தை கொள்ளையிட முற்பட்ட போதிலும் அந்த முயற்சிகளுக்கு இடமளிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்கப்பட்ட பணமோ அல்லது நகையோ களவாடப்பட்டதென்ற குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# அனுமதியற்ற வீடுகள், கட்டடங்களை தகர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

கிருலப்பனை கால்வாய் சித்தார்த்தபுர மற்றும் வேலுவனாராம வீதிப் பகுதிகளிலுள்ள அனுமதியின்றி கட்டப்பட்ட வீடுகள் விரைவில் தகர்க்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் அண்மையில் சித்தார்த்தபுர பகுதிக்கு வந்து சட்டவிரோத வீடுகள் விரைவில் தகர்க்கப்படும் என அறிவித்ததாக அங்குள்ள மக்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

அம்மக்களுக்கு கொழும்புக்கு வெளியே காணிகள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஓரிரு குடும்பங்களுக்கு ஏற்கனவே அவிசாவளையில் காணி வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வீட்டு மதிப்பீட்டு எண் உட்பட சகல விபரங்களையும் பொலிஸார் திரட்டியதாகவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வெள்ளவத்தை பொலிஸாரிடம் கேட்டபோது அப்பகுதியில் எத்தனை அனுமதியற்ற வீடுகள் உள்ளன என அறிவதற்காக தாம் ஆய்வொன்றை மேற்கொண்டதாகத் தெரிவித்தனர்.

அங்குள்ள பொலிஸ் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பாக கூறுகையில் பொலிஸ் தலைமையகத்திலிருந்து வந்த உத்தரவுக்கிணங்க இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இது தொடர்பான அறிக்கை ஏற்கனவே பொலிஸ் தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அனுமதியற்ற கட்டடங்கள் மாத்திரமே தகர்க்கப்படும் எனவும் பொலிஸார் உறுதியளித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பழிவாங்கும் நோக்கிலேயே பொன்சேகா மீது வழக்கு

## விஜித ஹேரத் தெரிவிப்பு

பழி வாங்கும் நோக்கில் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா மீது இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ ஹைகோர்ப் நிறுவனத்திடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்யவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவின் மருமகனின் நிறுவனமான ஹைகோர்ப் நிறுவனம் இராணுவத்துடனோ அல்லது பாதுகாப்பு அமைச்சுடனோ கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பில் ஆராய்வாதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின் மூலம் இந்த விடயம் புலனாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு உள்ளூர் நிறுவனங்களிட மிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப குழு அல்லது விலை மனுக் கோரல் குழு ஆகியவற்றின் மீது சரத் பொன்சேகா அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என நீதவான் நீதிமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகா மீது இராணுவ நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் என்ன காரணத்திற்காக தொடுக்கப்பட்டுள்ளதென்பது முழு உலகமுமே அறிந்த விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையான விசாரணைகளை நடத்த வேண்டுமாயின் சரத் பொன்சேகா பதவியில் இருந்த காலத்திலேயே வழக்கு விசாரணைகளை நடத்தியிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)




சிங்கபுர பினான்ஸ் கம்பனியினால் கண்டிப் பெரகராவைப் பார்வையிடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட சென்பற்றிக் கல்லூரி இன்றறக்ட் கழக மாணவர்களும் பொறுப்பாசிரியர்களும் அண்மையில் கண்டிப் பெரகராவைப் பார்வையிடுவதற்காக சுற்றுலாப் பயணமொன்றை மேற்கொண்டனர். இதில் மேற்படி கழக மாணவர்கள், பொறுப்பாசிரியர்களுடன் கண்டி றோட்டறிக்கழக அங்கத்தவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: சுன்னாகம் நிருபர்)

# 14.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1752 - கிரிகோரியன் நாட்காட்டியை பிரித்தானியா ஏற்றுக்கொண்டது. இதன்படி புதிய நாட்காட்டியில் 11 நாட்களை அது இழந்தது. முன்னைய நாள் செப்டம்பர் 2 ஆகும்.
- 1812 - நெப்போலியனின் படைகள் மொஸ்கோவினுள் நுழைந்தன. ரஷ்யப் படைகள் நகரை விட்டு விலகியதும் மொஸ்கோவில் தீ பரவ ஆரம்பித்தது.
- 1829 - ஒட்டோமான் பேரரசு ரஷ்யாவுடன் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ரஷ்ய - துருக்கியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1847 - மெக்சிக்கோ நகரத்தை "வின்ஃபீல்ட் ஸ்கொட்" தலைமையிலான அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.
- 1886 - தட்டச்சுப் பொறியின் நாடா கண்டுபிடிக்கப்பட்டது.
- 1901 - அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி செப் 6 இல் இடம்பெற்ற கொலைமுயற்சியின் பின்னர் இறந்தார்
- 1917 - ரஷ்யா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.
- 1954 - சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- 1959 - சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.
- 1960 - எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்) உருவாக்கப்பட்டது.
- 1962 - கொங்கோ மக்களாட்சிக் குடியரசில் இராணுவத் தளபதி ஜோசப் மோபுட்டு இராணுவப் புரட்சியை மேற்கொண்டு பிரதமர் பத்திரிசு லுமும்பாவை அரசு பதவியில் இருந்து கலைத்தார்.
- 1982 - லெபனானின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.
- 1999 - கிரிபட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐ.நா அவையில் இணைந்தன.
- 2000 -எம்எஸ் டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.
- 2003 -சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.
- 2005 - நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

### பிறப்புகள்

- 1939 - சோ.பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்
- 1965- திமித்ரி மெட்வெடெவ்த ரஷ்யாவில் மூன்றாவது ஜனாதிபதி
- 1973 - நாஸ், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

### இறப்புகள்

- 1901 - வில்லியம் மக்கின்லி, ஐக்கிய அமெரிக்காவின் 25வது ஜனாதிபதி (பி. 1843)
- 1982 - பசீர் ஜெமாயெல், லெபனான் அரசியல்வாதி (பி.1947)

**1853 இல் இந்நாளில் தான் சேர். பொன் அருணாசலம் பிறந்தார். (இ.1924)**



# ஈழத்தவர் வரலாறு

35

## 6.சிங்கைப் பரராசசேகரன் தொட்டு சங்கிலி செகராசசேகரன் வரை

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

**சப்புமல் குமரயா**

கனகசூரிய சிங்கையாரியன், வடவிலங்கையை ஆண்டவேளை, தென்னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங்கினான். அவன் யாழ்ப்பாணத்து ஆரிய அரசர்கள் மீது மாறாத பகைமை கொண்டிருந்தான். தென்னிலங்கை மன்னர்களிடமிருந்து யாழ்ப்பாண மன்னன் திறைபெற்று வருகின்றமையை அவனால் பொறுக்க முடியவில்லை. கம்பளை, றைகம, கோட்டை இராசதானிகளிலும் பார்க்க, யாழ்ப்பாணப்பட்டினத்தின் ஆரியச்சக்கரவர்த்தி சேனாபலத்திலும், பொருட்பலத்திலும் மேலோங்கியிருந்தான். அதனால் அவன் மலை நாட்டிலிருந்தும் கீழ்நாட்டிலிருந்தும் ஒன்பது துறைமுகங்களிலிருந்து திறைபெற்றான். கம்பளை மன்னனை ஆரியச்சக்கரவர்த்தியொருவன் வெற்றிகொண்டதோடு நில்லாது கல்சாசனமொன்றில் தனது வெற்றியைப் பொறித்து

கோட்டை மன்னனாக கி.பி.1415 இல் ஆறாம் பராக்கிரமபாகு அரசனாகிய பொழுது பல நூற்றாண்டுகளாகப் பலவீனமுற்றிருந்த சிங்கள இராச்சியம் மீண்டும் வலுப்பெற்றது. பராக்கிரமபாகு விவேகமும் ஆற்றலுஞ் சாதுரியமுங் கொண்ட அரசனாக விளங்கினான். இலங்கை முழுவதும் தன் மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அனுப்பினான்.

சப்புமல் குமரயாவின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த ஒரு பணிக்கனாவான். (யானையைப் பழக்குபவன்) ஆறாம் பராக்கிரமபாகு அவனை உபசரித்து, அவன் தேகவலியிலும் வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய்த் தன் குலத்தினளாகிய ஒரு

முன் சப்புமல் குமரயா யாழ்ப்பாண இராச்சியத்தின எல்லைப்புறக்கிராமங்கள் பலவற்றைக் கைப்பற்றி, அவற்றிலிருந்து சிறைப்பிடித்தவர்களைக் கோட்டைக்குக் கொண்டு வந்து எதிரியின் படை வலிமையை அவர்களிடமிருந்து அறிந்து கொண்டானென ராஜவலிய கூறுகிறது.

கோட்டை இராசதானியின் பெரும்படை தரைமார்க்கமாக வடக்கு நோக்கி நகர்ந்தது.கோகில சந்தேச என்ற நூலில் இப்படை நகர்ந்த வழி விபரிக்கப்பட்டுள் ளது.கோட்டையிலிருந்து மேற்குக் கரையோரமாக புத்தளம் பூநகரி கரைப்பாதை வழியே இப்படை முன்னேறியது.

உத்தரதேசத்தின் பண்டைய தலைநகரான பூநகரி சிங்கைநகர் எதிர்ப்பட்டிருக்கும். சப்புமல் குமரயாவின் படை சீரும் சிறப்போடும் செழித்து விளங்கிய பொங்கொலி நீர்ச்சிங்கை நகரைச் சிதைத்து அழித்தது.


சப்புமல் குமரயா (செண்பகப் பெருமாள்)

கொண்டான். கண்டி இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள், யாழ்ப்பாண இராச்சியம் என்பனவற்றைக் கைப்பற்றியமை இவனு டைய சிறப்பு மிக்க சாதனைகளாகும்.

பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தின் மீது (யாப்பாபட்டுன) படையெடுப்பதற்கான ஆயத்தங்களை ஆரம்பத்திலி ருந்தே செய்தான்.

பதினைந் தாம் நூற்றாண்டுச் சிங்கள நூல்கள் ஆரியச் சக்கரவர்த் தியின் அரசிருக்கையை 'யாபாபடுன' என்று குறிப்பிடுகின்றன.

14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட விஜயநகரப்பேரரசின் எழுச்சியும் ஈழத்தின் வடபகுதியில் அதனது ஆதிக்கப்படர்ச்சியும் ஆரியச்சக்கரவர்த்தியின் மேலாணை ஈழத்தின் தென்பகுதிக்கு விஸ்தரிக்கப் படுவதைத் தடுத்தன. இவையும் பராக்கிரமபாகுவின் யாபாபடுன வெற்றிக்குக் காரணமாயின.

கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். அவர்களுக்கு இரு புத்திரர்களும் ஒரு புதல்வியும் பிறந்தனர். இருபுத்திரர்களையும் பராக்கிரமபாகு தத்தெடுத்து அரண்மனையில் வளர்த்தான். அவர்கள் வலிமையும் வீரமும் கொண்டவர்களாக மாறினர். மூத்தவனான சப்புமல் குமராயாவின் வலிமையும், படைத்திறனும் கோட்டை இராச்சியத்தில் அவனைப்பற்றிய கணிப்பை ஏற்படுத்தின. பராக்கிரமபாகுவிற்கு இது கவலையைக் கொடுத்தது.

ஏனெனில், அவனது சொந்த மகளான உலகுடையதேவியின் வயிற்றுப்பிள்ளைை ஜெயவீரனுக்குத் தனக்குப்பின் கோட்டை அரசு கிடைப்பதற்கு சப்புமல்குமரயா தடையாக இருப்பானோ என அஞ்சி, யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றும் சிரமமான பணிக்குட்படுத்தினான் எனப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குறித்துள்ளார்.




மீண்டிருந்தான். கம்பளைக்கு அண்மையில் கோட்டகம எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்ச்சாசனம் அதனை நிரூபிக்கின்றது. இவற்றை பராக்கிரமபாகுவால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

கி.பி.1450 ஆம் ஆண்டு தனது வளர்ப்புப்புத்திரனும், சேனாதிபதியுமான சப்புமல் குமரயா (செண்பகப்பெருமான்) என்பானை, ஆறாம் பராக்கிரமபாகு, பெரும் படையுடன்

யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பதற்கு

**கலாநிதி க.குணராசா**
**செங்கை ஆழியான்**

வன்னிப்பிரதேசத்தில் சப்புமல்குமரயாவின் படையை எதிர்த்து வன்னியர்கள் நிற்கவில்லை. அவர்கள் ஏற்கனவே கோட்டை மன்னனின் மேலாணையை ஏற்றிருந்தார்கள்.(தொடரும்)

# இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பு

05



நாட்டுப்புற மக்களின் கட்டுப்பாடும், பேச்சுவழக்கும், அவர்களின் உணர்வுகளும் எவ்வாறு சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப அமைகிறது என்பதை இதே சிறுகதையில் இடம்பெறும்.

எடுத்துக்காட்டாக: கட்டுப்பாடு - முறங்களை பட்டாணியன் கோவிலில் போடும் வழக்கம்.

1. பேச்சு வழக்கும் உணர்வுகளும் - "பாவியளா? நல்லா இருப்பியளா?"

திருட்டுத்தனமாக கோழியை புடிச்சிக் கழுத்தைத் திருகுன ஒங்களுக்கு புள்ளைக் குட்டி ஒட்டுமா?

2. புதுமைப்பித்தனுடைய "கட்டில் பேசுகிறது" கதையில் "கழுதையை இழுத்துக் கீழே - போடு!" என்று கத்தினார் நானா விடுகிறவன்? ஒரே அமுக்கு : க்லோஸ் பண்ணித் தான் விட்டேன்!

கன்னடத்தில் அதே தொனி, உணர்வு தாளம் மாறுபடாமல், இருப்பதை காணலாம்.

1. "Paapigalee niivu haalaaga!"
"Kalthanadhinda kooliinnaa hiddhu katthan murdha
nimmagala maklu, mari vamsha haalaaga"

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

2. "kattheena hididhu kelage haaku" Naanu bittu bidthiina? onde salakke aa baalakanannu 'Klos' maadibitte.

மூல கவிதையின் தாளத்தில் கூட பொருள் உள்ள தென்றால்அதுபோன்ற தாளத்தை மற்றொரு மொழியிலும்கொண்டு வரவேண்டும் என ஜெர்மனிய நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் பிரெக்ட் (Matte Matte brect - U.R. Anantha Murthy 2009 கூறுகிறார்)

எடுத்துகாட்டாக ஒரு கவிதையின் தாளத்திற்கு

1. கவிப்பேரரசு வைரமுத்துவின் ஒரு நதியின் விதி என்ற கவிதையில் இடம் பெறும்.

குரவை மீன் தேடிக்
கோரைக்குள் கை செலுத்த
தண்ணீர்ப் பாம்பொன்று
முன்கையிற் சுற்றிவிட
பதறி உதறிப்
பாய்ந்தோட வைத்ததுவும்
இந்த நதிதான்
இதே நதிதான்.

கன்னட மொழியில் அதே வரிகள் தாளம் பிழைக்காமல் பின்வருமாறு மொழி பெயர்க் கப்பட்டுள்ளது.

"Meenu hudukalu hoogi
Jondu halla bali kai niidi
niira haavondhu
mungai balasalu
hedhari odhari
Dhigilugondu odiddhu
Ii nadi
idee nadi

2.) தொனி மாறாமல் இடம் பெற்றுள்ளவை பால் வினையாளி என்ற கவிதையில்

இரைப்பையை நிரப்பவா
கருப்பையைப் பட்டினியிட்டாய்?

கன்னட மொழியில்

tutthina chiila thumbisalendee
garbhachiilava upavasavirisi deyaa?

"வேலை முடிந்தது என்றால் திருப்தி அடைவது அல்ல மிகச்சிரத்தையுடன் செய்து முடித்த வேலை மட்டுமே திருப்தியை கொடுக்கும்" என்று Benjamin Franklin அவர்கள் கூறுவது மொழிபெயர்ப்பாளர்களுக்கும் சாலப் பொருந்தும் எனக்கருதுகிறேன். (முற்றும்)

**கே.மலர்விழி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெங்களூர் பல்கலைக்கழகம்

# கிரகங்களின் திசையும் பரிகாரங்களும்

## ராகு திசையில் சாந்தி பரிகாரம்



ராகு திசையில், ராகு புத்தியில் தங்க தகட்டில் மகாலட்சுமி உருவம் வரைந்து தானம் செய்வதோ, முடியாதவர்கள் மகாலட்சுமி படம் தானம் செய்வதோ கடன் தொல்லைகளைப் போக்கும்.

ராகு திசையில் குரு புத்தியில் சிவாலயத்தில் ருத்திர ஜெபம் செய்வது மனோ பீதியை விலக்கும்.

ராகு திசையில், சனி புத்தியில் ருத்ராபிஷே கம் செய்வது நீதிமன்ற வழக்கு, பிரச்சினைத் தீர்க்கும்.

ராகு திசை புதன் புத்தியில் விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் செய்ய குடும்பத்தில் உள்ள கலகங்கள் தீரும்.

ராகு திசை கேது புத்தியில் நாக பிரதிஷ்டை செய்ய புத்திரர்களால் ஏற்படும் மன வருத்தம் நீங்கும் ராகு திசை சுக்கிர புத்தியில் துர்க்கையை பூசை செய்ய சுபகாரியங்கள் விரைவில் நடக்கும்.ராகு திசை சூரிய புத்தியில் ஆதித்ய ஹ்ருதயம் சொல்லி சூரிய பகவானை பூஜிக்க அரச விடயங்கள் அனுகூலமாகும்.

ராகு திசை சந்திர புத்தியில் மிருத்யுஜ்சய ஜெபம் செய்ய கலகங்களும் பிரச்சினைகளும் தீரும்.

ராகு திசை செவ்வாய் புத்தியில் சுப்பிரமண்ய ஜெபம் செய்ய பூமி சம்பந்தப்பட்ட தொல்லைகள் உடனே நிவர்த்தி ஆகும்.

## குரு திசையில் சாந்தி பரிகாரம்



குரு திசையில் ருத்ர ஜெபம் செய்ய பெரியோர்களின் ஆசி கிடைக்கும். குரு திசை சனி புத்தியில் மிருத்யுசய ஜெபம் செய்ய கடுமையான போராட்டங்கள் நிவர்த்தி ஆவதுடன் வியாதிகள் தீரும்.

குரு திசை புதன் புத்தியில் பசு தானம் செய்ய முன்வினை விலகி நன்மைகள் உண்டாகும்.

குரு திசை கேது புத்தியில் வில்வத்தால் சிவபெரு மானை பூஜிக்க விஷ பயம் விலகும்.

குரு திசை சுக்ர புத்தியில் கிருஷ்ண பகவானின் மூல மந்தி ரத்தை ஜெபம் செய்ய நினைத்த காரியங்கள் சித்தி ஆகும்.

குரு திசை சூரிய புத்தியில் சூரிய நமஸ்காரம் செய்து வர வழக்குகள் வெற்றியடையும்.

குரு திசை சந்திர புத்தியில் வெண்மை நிறமான ஆடை தானம் செய்ய, குடும்பத்தில் பெண்களுக்குள் ஏற்படும் குழப்பங்களும், நீண்ட நாள் பகையும் தீரும்.

குரு திசை செவ்வாய் புத்தியில் ஆடு தானம் செய்ய பூமி சம்பந்தப்பட்ட வழக்கு வெற்றியடையும்.

குரு திசை ராகு புத்தியில் தில ஹோமம் செய்ய மரண பயம் விலகும்.

## சனி திசையில் சாந்தி பரிகாரம்



சனி திசையில் சனி புத்தியில் சந்நியாசிகளுக்கும், ஏழைகளுக்கும், வேதம் அறிந்த அந்தணர்களுக்கும் அன்னதானம் செய்ய விபத்துகள் விலகும்.

சனி திசை புதன் புத்தியில் எருமை தானம் செய்ய நீண்ட ஆயுள் உண்டாகும்.

சனி திசை கேது புத்தியில் சிவ பெருமானை பூஜித்து மிருத்யுஞ்சய ஜெபம் செய்ய வயிறு கோளாறுகள் நிவர்த்தி ஆவதுடன்,நீண்ட நாள் வியாதிகள் நிவர்த்தியாகும்.

சனி திசை சுக்ர புத்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடுகள் தானம் செய்ய கடன் பிரச்சினைகள் தீரும்.

சனி திசை சூரிய புத்தியில் சூரிய பகவானைப் பூஜித்து சூரிய நமஸ்காரம் செய்து வர அரசாங்க அனுகூலமும், அரசியல் வெற்றியும் உண்டாகும்.

சனி திசை சந்திர புத்தியில் வெண்மை நிறமான பசுவை தானம் செய்ய மனோ பீதி விலகும். தம்பதிகள் ஒற்றுமை உண்டாகும்.

சனி திசை செவ்வாய் புத்தியில் எருமை தானம் செய்ய பூமியால் ஏற்பட்ட கடன் நிவர்த்தியாகும்.

சனி திசை ராகு புத்தியில் எருமைக்கடா தானம் செய்ய செய்வினைகள் விலகும்.சனி திசை குரு புத்தியில் ஆடு தானம் செய்ய பகை விலகி ஒற்றுமை உண்டாகும்.

# பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக விவாதம்

இலங்கையின் நிலைமைகள் தொடர்பிலான விவாதமொன்று இன்று செவ்வாய்க் கிழமை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

வாய்மூல கேள்வி நேரத்தின்போது பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொது நலவாய துறையிடம் கேள்விகள் கேட்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொடர்பிலும் இலங்கையுடனான பிரித்தானியாவின் தற்போதைய உறவு தொடர்பிலும்தமிழ் மக்களின் நிலைமை தொடர்பிலும் கேட்கப்படும் கேள்விகளுக்கு பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம் ஹேக் மற்றும் ஏனைய வெளி விவகாரத்துறையிடம் அமைச்சர்கள் பதிலளிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் பலி

(கொழும்பு)

வவுனியா பொலிஸ் பிரிவிலுள்ள பூந்தோட்டம் குடியிருப்பு வீதியின் தென்னை மரத் தோட்ட சந்தியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 18 வயது இளைஞர் ஒருவர் பலியாகியதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் வவுனியா அரசி னர் பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் விபத்தில் சிக்கியபோது, அந்த வீதியால் வந்த கனரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்.

கணேசபுரத்தைச் சேர்ந்த பொன்னப்பு நவரூபன்(வயது 18) என்பவரே இந்த விபத்தில் பலியாகியதாகவும், காயமடைந்த பூவரசன்குளம்- சிவதர்சன் (வயது 23) என்பவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பாக, கனரக வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பிரிவுப் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# சேனக சில்வாவுக்கு எதிராக குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவின் ஊடக இணைப்பாளரும் உதவியாளருமான சேனக சில்வாவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை தங்கவைத்திருந்தார், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரின் குடும்பத்தினரையும் கொலைசெய்ய சதி செய்தார் ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சேனக சில்வா விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 7500 விடுதலைப்புலி சந்தேக நபர்கள் — தொடர்ந்தும் தடுத்து வைப்பு —

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

7500 தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள், போரை வழிநடத்தியவர்கள் உள்ளடங்கிய 700 பேரும் இதில் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட மேலும் இரண்டாயிரம் பேர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, சிறைக்கைதிகளுக் காக வருடா ந்தம் அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.



கைதிகளிடமிருந்து ஆக்கபூர்வமான நலன்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்தப்படவுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் அனைத்து மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளுக்கு ஒரேநாளில் தேர்தல் நடத்தப்படும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் முடிவடையவுள்ளது. இந்நிலையில் ஜனவரி மாதம் அவற்றுக்கான தேர்தல்களை நடத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்திற்கான பதவிப் பிரமாணம் எதிர்வரும் நவம்பர்மாதம் மேற் கொள்ளப்படும்.அதையடுத்து வரவு செலவுத் திட்ட விவாதங்கள் முடிவுற்ற பின் டிசம்பர் மாதம் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப் படும்.

3 தசாப்தகால யுத்தம் காரணமாக அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்த முடியாமல் இருந்தது.

எனினும் இம்முறை வடக்கு -கிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களிலும் ஒரே தினத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் குறைபாடுகள்

(31ஆம் திகதி தொடர்ச்சி)

### பிறவிக் குறைபாடுகளின் வகைகள்

பொதுவாக பிறவியிலேயே குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் குறைபாடுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

- இதயத் தடுப்புச் சுவர்களில் ஏற்படும் ஓட்டைகள்
- இதய வால்வுகளில் ஏற்படும் குறைபாடுகள்
- இதயத்தின் இரத்தக் குழாய்கள் உருவாகும் போது ஏற்படும் குறைபாடுகள்.

ஓட்டை விழுந்த இதயத்தோடு பிறந்த குழந்தைகள் பற்றி பரவலாக செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள். இதயத்தில் எப்படி ஓட்டை விழும்?

வலப்பக்கத்தில் அசுத்த இரத்தமும் இடப்பக்கத்தில் தூய்மையான இரத்தமும் இருக்குமாறு இதயத்தை இருதனிப் பகுதிகளாக தடித்த தசைகளால் ஆன தடுப்புச் சுவர்கள் பிரிக்கின்றன. ஆனால் சில பிறவிக் குறைபாடுகளால் இந்தச் சுவர்களின் ஓட்டைகள் விழக்கூடும். இதயத்தின் வலது இடது மேல் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவர் உருவாகும் போது அதில் ஓட்டை விழ வாய்ப்புகள் உள்ளன். இவ்வாறு இதய மேல் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவரில் விழும் ஓட்டையைக் குங்கும வண்ண ஓட்டை (PING HOLE) என்று சொல்வார்கள்.

இதையே இதய மேல் அறை தடுப்புச் சுவர் குறைபாடு (Atrial Septal Defect -ASD) என்றும் குறிப்பிடுவதுண்டு.




இதயத்தின் கீழ் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவர் உருவாகும் போது தடுப்புச் சுவரானது முழுமையாக அடைபடாமல் அங்கு விழும் ஓட்டையை கீழ் அறை தடுப்புச் சுவரில் விழும் குறைபாடு Ventricular Septal Defect-VSD என்று சொல்வார்கள்.

குழந்தைகளுக்கு நீலநிறக் குழந்தை நோய் Blue Baby Heart Disease என்ற குறைபாடும் பரவலாகக் கணப்படுகிறது. கர்ப்பப்பையில் குழந்தை வளரும் போது தாயின் தொப்புள் கொடியின் மூலமாக குழந்தையானது தனக்குத் தேவையான உயிர்வளி, இரத்தம், ஹோர்மோன்கள், உயிர்ச்சத்துக்கள் ஆகியவற்றைப் பெறுகிறது.

இதனால் வளரும் குழந்தையின் நுரையீரல் செயலிழந்து இருக்கும். தொப்புள் கொடியின் வழியாக குழந்தைக்குச் செல்லும் இரத்தமானது குழந்தையின் நுரையீரலுக்குச் செல்லாமல் தடுக்கக் குழல் போன்ற அமைப்பு உள்ளது. இந்தக் குழல் போன்ற அமைப்பானது பொதுவாக நூற்றுக்கு 99 குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் இயற்கையாக மூடிவிடும். ஆனால் ஒரு சதவீத குழந்தைகளுக்கு பிறக்கும் சமயத்தில் இந்தக் குழல் இயற்கையாக மூடப்படாமல் அப்படியே இருந்து விடும். இயற்கையோடு முரண்பட்ட இந்த நிலையை குழல் மூடா நிலை (**PATENT** DUCTUS ARTERO SIS) என்று சொல்வார்கள். இந்தநிலையும் இதயத்தைப் பாதிக்கிறது.

இயற்கைக்கு முரணாக அமைந்தஇந்தச் குழலின் வழியாக அசுத்த இரத்தமும் தூய்மையான இரத்தமும் கலப்பதால், குழந்தையின் நாக்கு,உதடுகள், விரல்கள், நகங்கள் ஆகியவை நீலநிறமாக மாறிவிடும். இந்த முரண்பாட்டால் குழந்தைக்குத் தேவையான, தூய்மையான இரத்தம் கிடைப்பதில்லை.

இதனால்இந்த நோயை நீலநிறக் குழந்தை நோய் என்று சொல்வார்கள். பிறந்த குழந்தைகளுக்கு இருதயத்தில் ஏற்படும் முக்கியக் குறைபாடுகளில் ஒன்று ஃபேலட்டின் நால்வகைக் குறைபாடுகள் (Fallots Tetralogy) என்ற பிறவி நோயாகும்.

பிறவிலேயே குழங்தைகளுக்கு இருதயத்தில் ஏற்படும் இத்தகைய குறைபாடுகளை முதலில் கண்டறிந்தவர் ஃபேலட் என்ற பிரான்ஸ் நாட்டு மருத்துவர் தான். அவரது நினைவாகத் தான் இந்தக் குறைபாடுகளுக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தக் குறைபாடுகள், கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நுரையீரல் இரத்தக் குழாய் குறுக்கம் (Pulmonary Stenosis), இதயக்கீழ் அறையில் ஓட்டை விழுதல்(VSD), மகாதமனி வலப்பக்கம் நிலைகொள்ளல் (Dextra Position of the Aorta), இடது கீழ் அறையானது பெருக்கம் அடைதல் (Ventricular Hypertrophy) மேற்கூறிய நான்கு வகையான குறைபாடுகளை ஒன்றுசேர்த்துத் தான் ஃபோலட்டின் நால்வகைக் குறைபாடுகள் என்கிறார்கள்.

இதயத்தின் வலப்பக்கத்தில் உள்ள அசுத்த இரத்தமானது கீழ் அறையில் உள்ள ஓட்டையின் வழியாக இடப்பக்கம் உள்ள தூய்மையான இரத்தத்துடன் கலந்து மகாதமனியின் வழியாக குழந்தையின் உடலில் உள்ள பல பாகங்களுக்குச் செல்வதால் குழந்தையின் உடல் முழுவதும் நீலம் பாய்ந்து குழந்தையானது நீலநிறக் குழந்தையாக (Blue Baby) காட்சி அளிக்கும்.

இதயத்தில் உள்ள முக்கிய வால்புகள், இயற்கையாக அமைந்துள்ள நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை இழந்து சில சமயங்களில் குறுக்கம்(Stenosis) அடைவதுண்டு. இந்த நிலையை வால்புகளின் குறுக்கம் என்று பொதுவாகச் சொல்வார்கள். பொதுவாக மகாதமனியில் உள்ள வால்வும், நுரையீரல் தமனியில் உள்ள வால்வும் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகி இதயமும் பாதிக்கப்படுகிறது. (முற்றும்)

# நுளம்பு விரட்டிகளால் அபாயம்!





வெயில் காலம் முடிந்து மழைக்காலம் தொடங்கப் போகிறது.இனி நுளம்புளின் காலம்.எங்கே சென்றாலும் பகலிலும் இரவிலும் நுளம்புகள் ரீங்காரமிட்டு, நம்முடைய இரத்தத்தை உறிஞ்சும்.

அப்படிக் கடி வாங்கப் போய்,சில நோய்களும் இலவசமாக வந்து விடுவதால், அதிலிருந்து தப்பிக்க நுளம்பு சுருள் ,கிரீம் மற்றும் ''மேட்'' களை பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.இப்படி பயன்படுத்துவது ஆபத்தில் போய் தான் முடியும் என்று எச்சரிக்கிறார்கள் டாக்டர்களும் விஞ்ஞானிகளும்!.

நுளம்புச் சுருள்களிலும் மேட்களிலும் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட பல்வேறு இரசாயனக் கலவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரசாயனங்களின் அடர்த்தி, நாம் இக் காற்றை சுவாசிக்கும் கால அளவு, அறையினுள் வரும் புதிய காற்றின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து இதனால் நமக்கு ஏற்படும் தீங்குகளின் அளவு நிர்ணயிக்கப்படுகின்றது.

நுளம்பை விரட்டுவதற்காக ஒருவர் தொடர்ந்து நுளம்புச்சுருள், மேட் ஆகியவற்றை பயன்படுத்தி வந்தால்,அவருக்கு நுரையீரலில் ஒருவித ஒவ்வாமை ஏற்பட்டு அது முழுமையாக விரிவடையாமலும் , அதன் கொள்ளளவுக்கு உண்டான காற்றை செயற்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலாமலும் போய் விட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக பல ஆய்வுகளில் நிரூபித்துள்ளனர்.

நுளம்புமேட்டில் இருந்து வெளிவரும் புகையை அப்போது பிறந்த அல்லது பிறந்து சில மாதங்களே ஆன பிஞ்சுக் குழந்தைகள் சுவாசித்தால்,அவர்களுக்கு வலிப்பு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கூறி எச்சரிக்கிறது லக்னோ பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வு.

மும்பையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் , நுளம்பு விரட்டிகளில் பயன்படுத்தப்படும் இரசாயனம் சிலருக்கு மலட்டுத்தன்மையை ஏற்படுத்தக்கூடியது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, நுளம்பு விரட்டியில் உள்ள டயேக்சின் புற்றுநோயை உருவாக்கக் கூடியது.அலெத்ரின் மனிதர்களின் உடல் எடையை மெல்லமெல்ல இழக்கச் செய்யும் தன்மை கொண்டது.

சரி... இதற்கு வேறு என்னதான் வழி? ஒரே வழிதான்...அது நுளம்புவலையை மட்டும் பயன்படுத்துங்கள்.!




## காது குடையும் பழக்கம் ஆபத்தானதா?




நம்மில் பலரிடம் பொதுவாகக் காணப்படும் பழக்கம், காது குடைவது.சிலர் காது குடைவதில் அலாதி சுகம் காண்கின்றனர். இந்தப் பழக்கம் நல்லதா? அல்லது இதனால் ஏதேனும் கேடு ஏற்படுமா? ஐம்புலன்களில் ஒன்று செவிப்புலன்.

காது மனிதனுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். காதின் உள்ளே செல்லும் குழாயில் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற் பட்ட சுரப்பிகள் உள்ளன.இவை சுரக்கும் மெழுகு போன்ற திரவம் தான்.காதிற்குள் தூசி , அழுக்குச் செல்லாமல் பாதுகாக்கிறது. காதின் நடுவில் மெல்லிய ஜவ்வு போன்ற தடுப்பு உள்ளது.இது செவிப் பறையாகும்.

இதுதான் காற்றில் வரும் ஒலி அதிர்வுகளை வாங்கி உள்ளே அனுப்புகிறது.சிலர் காதிற்குள் ஹேர்ப்பின்,தீப்பெட்டிக் குச்சி போன்றவற்றால் குடைவார்கள்.இது செவிப் பறையில் பட்டால், ஜவ்வில் ஓட்டை விழுந்து கிழிந்து விட வாய்ப்புள்ளது.

எனவே இத்தகைய பழக்கம் காதுக்கு ஆபத்தாக முடியும்.காது ஒரு மெல்லிய உறுப்பு.இதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை.

# விக்கல் நல்லதா ?



நமது வயிற்றையும்,மார்புப் பகுதியையும் 'டயபரம்' என்ற ஒரு பகுதி பிரிக்கிறது. சிலநேரங்களில், அதன் தசைநார்கள் திடீரென்றும், தன்னிச்சையாகவும் சுருங்கி விரிந்து செயல்படுகின்றன. அப்போது ஏற்படுவதுதான் விக்கல்.

விக்கல் நமது உடலுக்கு தேவையான-பயனுள்ள ஒன்றுதானா என்றால்," இல்லை" என்பதுதான் பதில்.பெரும்பாலான விக்கல்கள் காரணம் இல்லாமலேயே தோன்றுகின்றன. அவ்வாறே தாமாகவே விரைவில் நின்று விடுகின்றன.

ஓரிரு நிமிடங்களுக்கு மேல் அது நீடிப்பது மிகக்குறைவே.

அவ்வாறு விக்கல் ஏற்படும்போது, பொதுவாக ஒருவருக்கு நிமிடத்திற்கு நான்கு முதல் 60 தடவைகள் விக்கல் வரக்கூடும். குறைந்தளவு நேரம் மட்டும் நீடிக்கும் அத்தகைய விக்கல்களுக்கு எவ்வித மருத்துவ சிகிச்சையும் தேவையில்லை.

ஆனால், சிலருக்கு சில நாட்கள் வரை இந்த விக்கல் விட்டுவிட்டு தொடரலாம். இதற்கு காரணம் ஏதாவது நிச்சயம் இருக்கும்.அப்படிப்பட்ட நேரங்களில் உடனடியாக மருத்துவரை அணுகுவதுதான் நல்லது.

# தமிழகத்திற்கு கடத்தப்பட்ட முருகன் சிலை

# இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்குக் கடத்தப்பட்ட முருகன் சிலையை மீண்டும் இலங்கை அதிகாரிகளிடம் கையளிப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தமிழக அரசாங்கம் தெரிவித்துள்ளது.மூதூர், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் இருந்த இந்தச் சிலை கடந்த 2006 ஆம் ஆண்டு தமிழகத் திற்குக் கடத்தப்பட்டது.

பஞ்சலோகத்தினால் உருவாக்கப்பட்ட இந்த முருகன் சிலை தற்போது திருச்சியில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாகத் தமிழ கப் பொலிஸ் உயரதிகாரியான ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதியின்மை நிலவிய காலப்பகுதியில் இந்தச் சிலை இந்தியாவுக்கு கடத்தப்பட்ட போது தமிழக அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை களின் மூலம் குறித்த முருகன் சிலை இலங் கைக்குச் சொந்தமானதென தெரிந்து கொண் டதுடன் அதனை மீண்டும் இலங்கை அதி காரிகளிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்ப தாகவும் பொலிஸ் அதிகாரி ராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இந்திய வெளியுறவுத்துறை செயலர்

# நாளை மறுதினம் அமெரிக்கா பயணம்

இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ், நாளை மறுதினம் வியாழக் கிழமை அமெரிக்கா செல்லவிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது அமெரிக்க ஜனாதிபதியின் ஒபாமாவின் இந்தியா வரவிருப்பது தொடர் பான நிகழ்ச்சி நிரலை இறுதி செய்வது குறித்த அமெரிக்க அதிகாரிகளுடன் நிருபமா பேச்சு நடத்தவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஒபாமா எதிர்வரும் நவம்பர் 9 ஆம்திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை . இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவரது வருகையின்போது , இந்தியத் தலைவர்க ளுடன் பேச்சு நடத்துவது, குறித்து முடிவு செய்வதற்காகவே நிருபமா அமெரிக்கா செல்லவுள்ளதாகவும், ஒபாமா நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகி யோரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசா கட்டண உயர்வு, வெளிப்பணி ஒப்படைப்பு தடைவிவகாரம், உயர் தொழில் நுட்ப ஏற்றுமதி உள்ளிட்ட விடயங்கள் குறித் தும் அமெரிக்க அதிகாரிகளுடன் நிருபமா பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற் கிடையே எதிர்வரும் 20 ஆம்திகதி ஐ.நா. பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளி யுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நியூயோர்க் செல்லவுள்ளார். இவருடன் நிருபமாவும் அக் கூட்டத்தில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஒபாமாவின் மனைவிக்கு பரிசளிக்க

# 70 கிராம் எடையில் பட்டுப் புடைவை

(புதுடில்லி)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா டில்லி வரும் போது அவரது மனைவிக்கு பரிசளிப் பதற்காக கர்நாடகத்தைச் சேர்ந்த நெசவாளர் தம்பதியர் 70 கிராம் எடையில் பட்டுப் புடைவை தயாரித்து வருகின்றனர். அமெரிக்க அதிபர் ஒபாமாவும் அவரது மனைவி மிச்சேலும் நவம்பர் மாதம் இந்தியப் பயணம் மேற் கொள்கின்றனர்.

அவர்கள் டில்லி வரும் போது ஒபாமா வின் மனைவி மிச்சேலுக்கு 70 கிராம் எடையில் பட்டுப் புடைவையும் 30 கிராம் எடையில் தீப்பெட்டியில்மடித்து வைக்கக் கூடிய அளவில் முக்காடு துணியையும் பரிசாக அளிக்க பெங்களூரைச் சேர்ந்த நாராயணப்பா வயது (69) , கமாலாம்மா வயது (67) தம்பதியர் திட்டமிட்டுள்ளனர்.

பட்டு நெசவில் பலவித வேலைப்பாடு களைச் செய்து ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ள நாராயணப்பா இது குறித்து கூறு கையில், இந்தியா வரும் ஒபாமாவை சந்திக் கும் வாய்ப்பு எனக்கு கிடைக்குமா என்பது தெரியவில்லை. இருப்பினும் நாங்கள் தயாரித்த பரிசுப் பொருள் அவர் களுக்கு சென்று சேர வேண்டும் என் பது தான் என்னு டைய விருப்பம்.



வழக் கமாக ஒரு பட்டுப் புடைவை யின் எடை 600 கிராம் முதல் ஒரு கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். நாங்கள் நெய்து வரும் பிரத்தியேக பட்டுச் சேலை 6.5 மீற்றர் நீளமும் 44 அங்குல அகலமும் 70 கிராம் எடையும் கொண்டது. இந்தச் சேலையை 20 நாட்களுக்குள் நெய்து முடித்துவிடுவோம். இந்த வயதிலும் நுண்ணிய வேலைப்பாடு மிக்க சேலையை நெய்வதற்கு நல்ல கண் பார்வையை அளித்துள்ள கடவுளுக்கு நாங் கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கி றோம். 36 அங்குல நீள அகலம் கொண்ட தலையில் அணியக்கூடிய பட்டுத் துணி தங்க நிறத்தில் அமைந்தது. இதில் கோவில் கோபுரம் போன்ற டிசைன்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன என நாராயணப்பா கூறி னார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# ஊரடங்கு உத்தரவை மீறி

# காஷ்மீரில் போராட்டம்

## துப்பாக்கிச்சூட்டுக்கு இளைஞர் பலி

(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் வன்முறை, கலவரம் நடந்து வருகின்றன. பாதுகாப்புப் படையினர் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். வன்முறையை அடக்க அங்கு இராணுவத் தினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக வன்முறை எதுவும் நடைபெறாததால் ஊடரங்கு உத் தரவு வாபஸ் பெறப்பட்டு இருந்தது. கடந்த 11 ஆம் திகதி முதல் அங்கு மீண்டும் வன்முறை வெடித்தது. ஹீரியத் மாநாடு கட்சியின் பிரிவினை வாத தலைவர் மீர் வைஸ் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த கும்பல் அமைச்சர் வீடு மீது தாக்குதல் நடத்தியது. இந்தக் கும்பலை கலைக்க தடியடி நடத்தப் பட்டது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீநகர் உள்ளிட்ட 7 நகரங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் ஊரடங்கு உத்தரவை மீறி நேற்று கலவரக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாதுகாப்புப் படையினருக்கான சிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெறக் கோரி இந்தப் போராட்டம் நடந்தது.

கூட்டத்தை கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதுடன் பொலிஸார் மீது கல்வீசப்பட்டது. இதனால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் வாலிபர் ஒருவர் பலியானார்.

இந்த நிலையில் காஷ்மீர் கலவரம் தொடர்பாக முதல் -மந்திரி உமர் அப்துல்லா காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை நேற்றுக் சந்தித்துப் பேசினார். 15 நிமிட நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது.

பாதுகாப்புப் படையினருக்கான சிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை உமர் அப்துல்லா ஏற்கனவே வலியுறுத்தி வருகிறார். இது தொடர்பாக அவர் சோனியாவிடம் ஆலோ சனை செய்ததாக கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சரவை கூட்டம் நடை பெற்றுக்கொண்டு இருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நாங்கள் காதலிப்பது உண்மை

# நயன்தாராவை விரைவில் திருமணம் செய்வேன்

## பிரபுதேவா அறிவிப்பு

நயன்தாரா, பிரபுதேவா காதல் பற்றிய செய்திகள் தொடர்ந்தும் வருகின்றன. இருவ ருமே அதை மறுக்கவும் இல்லை, ஆமோ திக்கவும் இல்லை. காதல் விவகாரம் பற்றிக் கேட்கும் போதெல்லாம் சொந்த விடயம் என்று சொல்லி கருத்து சொல்லாமல் மௌனம் காத்தனர்.

இருவருக்கும் இரகசியத் திருமணம் நடந்துவிட்டதாகவும் சில கிசுகிசுக்கள் வெளி வந்தன. இதற்கெல்லாம் பதில் அளித்த முதல் தடவையாக பிரபுதேவா பேட்டி அளித் துள்ளார்.

இதுகுறித்து மும்பை அருகில் உருமி படத்தை இயக்கிக் கொண்டிருந்த அவரிடம் காதல் பற்றிக் கேட்கப்பட்டது.

அப்போது அவர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு,

*கேள்வி - நயன்தாராவுக்கும், உங்களுக் கும் காதல் என தொடர்ந்து செய்திகள் வருகின்றன. அதற்கு பதில் சொல்வதை ஏன் தவிர்க்கிறீர்கள்? உங்களுக்குள் உள்ள உறவுதான் என்ன?*

பதில்- என் சினிமா வாழ்க்கையில் பத்திரி கைகளில் நிறைய செய்திகள் என்னைப் பற்றி வந்துவிட்டன. அதுபற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. விளக்கங்கள் சொல்வதையும் தவிர்த்தேன். மறுப்புகளும் சொல்லவில்லை. ஆனால் நயன்தாரவை பொறுத்தவரை அவர் எனக்கு விடேசமானவர் ஆமாம் நான் நயன்தாராவை காதலிக் கிறேன். விரைவில் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருக் கிறோம். இது எனது தனிப்பட்ட சொந்த விடயம் இதை பற்றி விளக்கமாக ஊடகங் களுக்குத் தெரிவிப்பது அவசியம் இல்லை. மனம் திறந்து எதையும் பேச விருப்பமும் இல்லை.

*கேள்வி- உங்களால் நயன்தாரா சினிமாவுக்கு முழுக்கு போடப்போவதாகக் கூறப்படுகிறதே?*

பதில்:- நயன்தாரா வீட்டுப்பறவை போன் றவர். மிகவும் சாதாரணமாக இருப்பார். எந்த ஒரு பெண்ணையும் காதலிப்பவன் அவளு டன் அதிக நேரத்தை செலவிடத்தான் விரும் புவான்.நானும் அதற்கு விதிவிலக்கு இல்லை .நயன்தாரா சினிமாவில் நிறைய சாதித்து விட்டார். முன்னணி நடிகையாகவும் இருக்கி றார்.இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். நாங்கள் இருவருமே ஒருவருக் கொருவர் அன்பைப் பகிர்ந்து கொள்ளாமல் வேலை



நோக்கோடு இருப்பதில் அர்த்தம் இல்லை.

*கேள்வி:- நயன்தாரா உங்கள் வாழ்க்கையில் வர என்ன காரணம்?*

பதில்:- ஒரு விடயம் இல்லை. அதிகம் கூற இருக்கிறது. நான் கஷ்டப்பட்டபோது ஆறுத லாக இருந்தார்.பாலைவனத்தில் எனக்கு சோலையாக தெரிந்தார். பொதுவாக நான் முற்கோபக்காரன். என்னை மாற்றி விட்டார். நான் முன்பு போல் இல்லை என்று என் உதவியாளர்களே சொல்கிறார்கள். அவர் தைரியசாலி. என்னையும் அவரைப் போல் ஆக்கிவிட்டார்.

நிபந்தனைகள் இல்லாதது காதல் என் பதையும் அவர்தான் புரியவைத்தார். நயன் தாரா அற்புதமான மனிதப்பிறவி. அவர் சார்ந்த எல்லாவற்றையுமே விரும்புகிறேன் என்றார். (ஸ்ரீ-2)

# சந்திரபாபு நாயுடுவின் கார் மீது

# கல்வீச்சு தாக்குதல்

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திர பாபு நாயுடு வந்த கார் மீது தெலுங்கானா ராஷ்டிரீய சமிதி கட்சியினர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்காக மெஹபுப்நகர் மாவட் டத்துக்கு தனது கட்சியினருடன் சந்திரபாபு நாயுடு நேற்று காரில் வந்து கொண்டிருந்தார். தெலுங்கானா பகுதிக்கு வந்த அவரை தெலுங் கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சியினர் வழிமறித்து அவருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

பொலிஸார் அவர்களை விரட்ட முயன்ற போது சந்திர பாபு நாயுடுவின் கார் மீது சரமாரி யாக கற்கள் வீசப்பட்டன. இதில் அவரது கார் ஜன்னல்கள் உடைந்ததாக தகவல்கள் தெரி விக்கின்றன.இதைத் தொடர்ந்து சந்திரபாபு நாயுடுவுக்கு பொலிஸார் பலத்த பாதுகாப்பு அளித்தனர்.

தனித்தெலுங்கானா விவகாரத்தில் சந்திர பாபு நாயுடுவின் நிலைப்பாட்டால் அதிருப்பதி அடைந்ததன் எதிரொலியாக சந்திரசேகரரா வின் கட்சித் தொண்டர்கள் இந்த செயலில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இந்த கல்வீச்சு தாக்குதலில் தெலுங்கு தேச கட்சியினருடன் செய்தியாளர்கள் சில ரும் காயமடைந்ததாக தகவல்கள் தெரிவிக் கின்றன. (ஸ்ரீ-2)












யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி யாழ். செயலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அவசர செயற்பாட்டு நிலையத்தை அமைச்சர் பௌசி திறந்து வைப்பதையும் அந்நிலையத்தைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# கனேடிய அரசின் மென்மைப்போக்கு காரணமாக விடுதலைப்புலிகள் மீளுருவாக்கம் பெற முயற்சி

## ரொஹான் குணரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

கனடா அரசாங்கம் கடைப்பிடித்துவரும் பயங்கரவாதம் தொடர்பான மென்மைப் போக்கு காரணமாக அந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் உருவாவதற்கான ஏது நிலைகள் ஏற்பட்டுள்ளதாக சிங்கப்பூரைச் தளமாகக்கொண்ட பயங்கரவாத துறைசார் நிபுணர் ரொஹான் குணரத்ன வெளியிட்டுள்ளார்.

நோர்வேயிலுள்ள விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் கனடாவில் மீள் உருவாக்கம் பெற முயற்சிகளை எடுத்துவருவதாக ரொஹான் குண்ரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய பஞ்சாப் வன்முறைகளில் ஈடுபட்ட பாமர் கல்லுவு அமைப்பை போன்றே தமிழீழ விடுதலைப்புலிகள் கனடாவில் தமது தளத்தை அமைக்க முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை கனடாவிற்கு செல்வதற்கான மக்களை திரட்டும் பணிகளும் நிதிகளை திரட்டும் பணிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்படுவதாகவும் இந்த நிலையில் கனடாவிற்கான அடுத்த கப்பல் செல்வதற்கு மேலும் காலம் பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதற்கு உரியமுறையில் கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நோர்வேயிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை கனடாவின் பொறுப்பற்ற செயலைக் கண்டு புன்னகைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் மறுஅறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-7-134)

# மாநகரசபை உறுப்பினர் காணாமல் போனமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மர்மமான முறையில் காணாமல் போயுள்ள தமது கட்சியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர் பிரகாசம் சகாயமணி தொடர்பாக 20 நாட்கள் கடந்து விட்ட போதிலும் இதுவரை எவ்வித சாதகமான முடிவுகளும் கிடைக்கவில்லை என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவ னேசதுரை சந்திரகாந்தன் செய்தி ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி முதல் குறித்த மாநகர சபை உறுப்பினர் காணாமல் போயிருப்பது மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளை அழைத்து விசாரணை களை மேற்கொண்டு கண்டுபிடித்துத் தருமாறு கேட்டுள்ள போதிலும் இதுவரை சாதகமான முடிவு கிடைக்கவில்லை.

இப்போது கிழக்கு மாகாணம் முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

இந்நிலையில் இதற்கு யார் பொறுப்பு என்பதை சட்ட ஒழுங்கை அமுல்படுத்தும் பாதுகாப்புத் தரப்பினரே பொறுப்புக் கூற வேண்டும்.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணி கள் மட்டக்களப்புக்கு வருகை தரும் நிலை யில் மாநகரசபை உறுப்பினர் காணாமல் போன விவகாரம் அவர்களையும் அச்சத்துக்குள்ளாக்கியுள்ளது எனவும் முதலமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம்

## அமெரிக்காவிடம் இலங்கை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துமாறு அமெரிக்காவிடம் இலங்கை கூறியுள்ளது.

இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் தேவையற்றதும் பொறுப்பற்றதுமான விமர்சனங்களை அமெரிக்கா தெரிவிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இலங்கையின் புதியஅரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் அமெரிக்காவின் கண்டனத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

அரசாங்கம் தேவையற்ற விமர்சனங்களைக் கவனத்திற்கொள்ளாது எனக் கூறிய அமைச்சர், முதலில் அமெரிக்கா தங்களது பிரச்சினைகளை கவனத்திற்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

இவ்வாறான தேவையில்லாத விமர்சனங்களை செய்வதினூடாக அமெரிக்கா இலங்கையின் உள்விகாரங்களில் தலையிட்டுள்ளது மாத்திரமன்றி, எமது நாட்டின் அதியுயர் மன்றமான உயர் நீதிமன்றத்தையும் அவமதித்துள்ளது என அமைச்சர் ரம்புக்வெல்ல இணையத்தளமொன்றிற்கு தெரிவித்தார்.

முதலில் இலங்கை தொடர்பில் அறிக்கை வெளியிடுவதற்கு முன்னராக இலங்கையின் அரசியலமைப்புத் தொடர்பில் கற்றுக் கொள்ளுமாறும் அமெரிக்காவிடம்தாம் தெரிவிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய அரசியலமைப்புக்கான திருத்தங்கள் இலங்கையில் அரசியல் யாப்புக்கு அமையவே செய்யப்பட்டுள்ளது. நாங்கள் செய்தது சட்டப்படியானது.

எனவே எவருக்கும் இதனை விமர்சிக்கும் உரிமை கிடையாது எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் அரசியலமைப்பில் செய்யப்பட்டுள்ள புதிய திருத்தங்களைக் கண்டித்து கடந்த 11 ஆம்திகதி அமெரிக்கா கடுமையாக விமர்சித்துள்ளதுடன், இத்திருத்தங்கள் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதாகவும் அமெரிக்கா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நாடு முழுவதும் 58 காதி நீதிமன்றங்களை அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் 58 காதி நீதிமன்றங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் முதற்கட்டமாக 10 காதி நீதிமன்றங்களை அமைப்பதற்கு தற்போது நீதி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் சம்மாந்துறை, கிண்ணியா,பியகம மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களில் காதி நீதிமன்றங்கள் ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் இதற்கென 38 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவிக்கின்றது.

காதி நீதிமன்றம் என்பது 1951ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கம் கொண்ட முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றமாகும்.

இந்த நீதிமன்றங்களினால் முஸ்லிம் மக்களின் திருமணங்கள் தொடர்பாக பிரச்சினைகள் மாத்திரம் அதாவது பராமரிப்பு மற்றும் விவாகரத்துக்கள் தொடர்பான நீதிமன்ற அதிகாரங்கள் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

ஒவ்வொரு தலைமுறையிலும் மனித இனத்தை காத்துவரும் கடவுளே குழந்தை.

– ஓர்அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# காசநோய் அறிகுறியுடன் யாழில் எயிட்ஸ் நோயாளி

## டாக்டர் யமுனானந்தா எச்சரிக்கை



யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் காச நோய் அறிகுறிகளுடன் வந்த நோயாளிகளில் ஒருவரில் எயிட்ஸ் நோய்க்குரிய அறிகுறிகளும் இருந்தது.இது குருதிப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயுடன் காச நோய் ஏற்படுவது மிகவும் ஆபத்தான சமூகநிலையாகும். இது யுத்தத்தினால் சீர்குலைந்த நாடுகளில் பொதுவாக ஏற்படுவது. உதாரணமாக கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா, ஆபிரிக்கநாடுகளில் எயிட்ஸ் நோயும் காசநோயும் இணைந்து காணப்படுகிறது.

இவ்வாறு யாழ். மாவட்ட காசநோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் வி. யமுனானந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவர் விடுத்துள்ள அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காசநோயினால் மிகவும் ஆபத்தான MDRTB, XDRTB என்பனவாகும்.

எயிட்ஸ் நோய், காசநோய் தொற்று ஏற்படும் போது இரண்டு நோய்களிற்கும் சிகிச்சை அளிக்கவேண்டும்.

எயிட்ஸ் நோய் பற்றி வெளிப்படையாக கதைப்பதற்கு சிலர் அருவெருப்படைகின்றனர். ஆனால் அதேநேரம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த ஒரு நிலையாகும். தற்போதய மருந்துகளால் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்கு உட்படுத்தி நலத்துடன் வாழவைக்கமுடியும்.

எனவே யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வினை சிறந்த முறையில் முன்னெடுக்க சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் உதவவேண்டும்.

முறைகேடான பாலியல் நடத்தைகள் ஆபத்தானவை.

எமது சூழலில் எயிட்ஸ் நோயினது பரம்பல் அதிகரித்துள்ளபோது ஏதுமறியாதவர்கள் அதனால் பாதிப்படையாது இருப்பதற்கு நடவடிக்கை மிகவும் இன்றியமையாதது.

இலங்கைச் சட்டத்தில் காசநோய்கள் இனங்காணப்பட்டு சிகிச்சைக்கு வராது விடும் இடத்து நீதிமன்றம் மூலம் கட்டாய சிகிச்சை கொடுக்கமுடியும். ஏன் எனில் சிகிச்சை பெறாத காச நோயாளிகளினால் ஏனையவர்களுக்கு தொற்று ஏற்படும் என்பதால்.

அதேபோல் நாம் எமது சூழலில் எயிட்ஸ் நோய் எவ்வாறு ஏற்படுகின்றது. எவ்வாறு பரவுகின்றது. எயிட்ஸ் நோய் பரவாது இருக்க என்ன முற்காப்பு நடவடிக்கை செய்தல் வேண்டும். எயிட்ஸ் நோய்க்குரிய சரியான சிகிற்சை யாது என விளங்கப்படுத்தல் எமது கடமையாகும்.

இது எந்தநோயாளியையும் புண்படுத்துவதாக அமையாது. மாறாக சமூகத்தினை பண்படுத்துவதாக அமையும். (ச)

# பேழையில் வைத்து கங்கையில் விட்ட கலாசாரம் தொடரவே செய்கிறது

கொக்குவில் பகுதியில் ஆண் குழந்தை ஒன்றை சாக்கில் வைத்து அதனை வீதியோரத்தில் போட்டுவிட்டு சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடந்துள்ளது.

பிறந்தவுடனேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குழந்தையை கண்டெடுத்தவர்கள் கூறுகின்றனர்.

சாக்கில் இடப்பட்டு வீதியோரத்தில் போடப்பட்ட குழந்தையை வீதியால் சென்றவர்கள் கண்டு கொண்டதனால் அந்தக் குழந்தை தெய்வாதீனமாக உயிர் பிழைத்தது.

மாறாக அந்தக்குழந்தையை நாய்கள் கண்டிருக்குமாயின்–காகம் பார்த்திருக்குமாயின் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை நினைத்துப்பார்க்கவே நெஞ்சம் நடுங்குகிறது.

எந்தளவுக்கு அந்தக் குழந்தை ஆபத்தை எதிர் கொண்டிருக்கும். இது பற்றி சிந்திப்பதனால் ஏற்படும் பயன் எதுவுமில்லை.

இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதற்கான அறியாமையும் ஆபத்தும் குறித்தே நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பெற்றக் குழந்தையை சாக்கில் வைத்து வீதியோரத்தில் போடுவதென்பது, பேழையில் வைத்து கங்கையில் விடப்பட்ட கர்ணனின் பிறப்புடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும் என முடிபெடுப்பதில் தவறில்லை.

அதேநேரம் குந்தியும் ஆதிபகவனும் விட்ட தவறுகள்தான் இவை. இந்த உலகம் முழுமையான தூய்மையைக் கொண்டது என்ற எடுகோளில் பார்ப்பது மகாதவறு.

அதேநேரம் இத்தகைய தவறுகள் முழுமையாக தவிர்க்கப்படவேண்டும் என்ற வாதத்துக்கு எதிர்வாதம் கிடையாது.

ஆனால் இவ்வாறான ஒரு தவறு, சந்தர்ப்ப சூழலால் ஏற்பட்டுவிட்டதெனில், அதற்கான வழிமுறைகளை–ஆற்றுப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய இடங்களை அணுகுவது கட்டாயமாகும்.

இது எதிர்காலத்தில் மகாதவறுகள் ஏற்படுவதை தடுப்பதற்கு உதவும்.

அதேநேரம் பாவபழி என்ற எங்கள் மனச்சாட்சியத்தின் உறுத்தல்களில் இருந்து விடுபடுவதற்கும் இதுவே ஒரே வழியாகும்.

குழந்தையை வீதியில் போட்டவர்களின் மனநிலை அந்தக் குழந்தை எங்காவது உயிரோடு வாழட்டும் என்பதாக இருக்கலாம்.

ஆனால், அந்த நினைப்பிற்குள் இருக்கக் கூடிய ஆபத்துக்கள் உணரப்படவில்லை. குழந்தையின் தாயை பொலிசார் கண்டுபிடிக்கும் போது அத்தனையும் பகிரங்கமாகிப்போகலாம்.

சிலவேளை பொலிசாரின் வலைக்குள் அகப்படவில்லையாயினும், எனது குழந்தையை வீதியில் போட்டேனே என்ற நினைப்பு ஆயுள் காலம் முழுவதும் வாட்டிவதைக்கும்.

ஆக, தவறுகளை மறைப்பதற்காக மகாதவறுகளை செய்யாமல் இருப்பதே புத்திசாலித்தனம். இதற்காக மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் குடும்பநல வழிகாட்டல் அமைப்புகளின் ஆலோசனைகளை பெறுவது செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக அமையும்.

# ஊடகவளங்கள் பயிற்சிநிலையம் மாலை 6 மணிவரையும் இயங்கும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் இன்றிலிருந்து மாலை 6 மணிவரை இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இணையவசதிகள் பயன்படுத்தவும், பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் பார்வையிடுவதற்கு ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் வசதிகள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் பிற்பகல் 2 மணிவரையும் ஊடகவளங்கள் பயிற்சிநிலையம் இயங்கிவந்ததுடன் ஊடகவியலாளர்கள் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட வைத்தியசாலையாக இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் ஆதார வைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்ட ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு வந்தடைந்த அமைச்சரை மாவட்ட வைத்திய அதிகாரி அருண புண்ணியமூர்த்தி தலைமையில் வைத்திய அதிகாரிகள் தாதியர் சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் ஊழியர்கள் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து வைத்தியசாலையினை சுற்றி பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நோயாளர் விடுதிகளுக்கும் சென்று விடுதியில் தங்கியுள்ள நோயாளர்களது சுகநலன்களையும் விசாரித்தார்.

இவ் விஜயத்தின் முக்கிய அம்சமாக ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கென ஒரு தொகுதி மெத்தைகளையும் சக்கர நாற்காலிகளையும் அமைச்சர் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் உத்தியோகப் பூர்வமாக கையளித்தார்.

மேலும் வைத்தியசாலையின் ஏனைய தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன் அதுகுறித்து தமக்கு கோரிக்கை கடிதத்தை கையளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மற்றொருபுறம் வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோர் தமக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையினை தான் மாவட்டம் தழுவிய ரீதியில் மேற்கொள்வதாகவும் விரைவில் சாதகமான முடிபுகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன், தீவக பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரட்ண, யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், ஊர்காவற்றுறை பொறுப்பாளர் காந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந)

# காளி கோயிலுக்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாரதிபுரம் காளி கோயிலுக்கான அடிக்கல்லை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் நாட்டிவைத்தார்.

கலாசாலை வீதியிலுள்ள காளியம்மன் கோயில் இது வரை காலமும் கோபுரக்கலசம் இல்லாதிருந்த நிலையில் கோயிலுக்கான கோபுரக் கலசத்தை அமைக்கும் திட்டத்திற்கு அமைய இந்த அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பிள்ளையார் கோயிலுக்கான அடிக்கல்லும், பிரதான காளிகோயிலுக்கான அடிக்கல்லும், தொடர்ந்து முருகன் கோயிலுக்கான அடிக்கல்லும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நாட்டிவைக்கப்பட்டன.

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



திரும்பத் திரும்ப இறைவனின் திருநாமத்தை சொல்லுதலே ஜெபம். ஜெபம் செய்வதன் மூலம் இறைவனின் எல்லையற்ற நிலைக்கு ஒருவன் உயர்கிறான்.

குறை கூறுவது ஒருபோதும் நன்மை பயக்காது. வேறு சிந்தனைக்கு இடம் இன்றி இடையறாது இறைவனை நினைப்பதே பக்தி எனப்படும்.

"நூல்களிலுள்ள அறிவும், பிறர் கையிலுள்ள பணமும் பயன்படாது."

# அடுத்த பத்தாண்டுகளில் உலகில் நடக்கக்கூடிய சம்பவங்கள்

## பிரபல போர்ப்ஸ் பத்திரிகை ஆரூடம்

(பாஸ்டன்)

பிரபல தொழிலதிபர் முகேஷ் அம்பானி எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் உலகிலேயே மிகப்பெரிய பணக்காரராக இருப்பார் என போர்ப்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. பிரபல போர்ப்ஸ் ஆங்கில பத்திரிகை அடுத்த 10 ஆண்டுகளில் சில நிகழ்வுகளை கணித்து வெளியிட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு,

ரிலையன்ஸ் நிறுவன அதிபர் முகேஷ் அம்பானியின் தற்போதைய சொத்து மதிப்பு ஒரு இலட்சத்து 45 ஆயிரம் கோடி ரூபாய். எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் இந்த மதிப்பு மூன்று இலட்சத்து 10 ஆயிரம் கோடியைத் தாண்டி உலகிலேயே மிகப் பெரிய பணக்காரர் என்ற அந்தஸ்தை முகேஷ் அம்பானி பெறுவார். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளிங்டனின் மகள் செல்சியா கிளிங்டன் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் செனட்டராக தேர்வு செய்யப்படுவார்.

2018 இல் ஆப்கானிஸ்தானில் பணியை முடித்து அமெரிக்கப்படைகள் வாபஸ் பெறும். சீனா, பிரம்மபுத்ரா நதிக்கு குறுக்கே எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் அணைக் கட்டும். வடகொரிய அதிபர் கிம் ஜோங் தனது 70 ஆவது வயதில் இறந்து விடுவார். இதையடுத்து அவரது மகன் கிம் ஜாங் யுன் அடுத்த ஆண்டு அதிபராவார்.

உலகம் வெப்பமயமாகி மாலை தீவு மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள முஸ்லிம்கள் இலங்கையில் குடியேறுவர். அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2016 ஆம் ஆண்டில் இணையத்தளம் மூலம் நடக்கும்.

இந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக புகார்கள் கூறப்படும். சீனாவுக்கும் பிரான்சுக்கும் இடையே டிரான்ஸ் யுரேசியா எக்ஸ்பிரஸ் புகையிரதம் 300 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய வகையில் இயக்கப்படும்.

அவுஸ்திரேலிய பெண்கள் 2016 ஆம் ஆண்டில் ஸ்டெம் செல் மூலம் செயற்கை விந்தணுவின் துணையால் குழந்தையை பெற்றெடுப்பார்கள்.

சீனாவில் பெண்களு க்கு பற்றாக்குறை ஏற்பட்டு ஆண்கள் ஓரின சேர்க்கை திருமணத்துக்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளிக்கும். (ஶ்ரீ-2)

## துருக்கியில் சர்வஜன வாக்கெடுப்புக்கு அமெரிக்கா,ஜேர்மனி வரவேற்பு

துருக்கியில் அரசியலமைப்பை மாற்றியமைப்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு முடிவுக்கு அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் ஜெர்மன் வெளிவிவகார அமைச்சர் குயிடோ வெஸ்ரர்வெலி ஆகியோர் இந்த வாக்கெடுப்புத் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வரவேற்புத் தெரிவித்தனர்.

நாட்டின் இராணுவ ஆட்சிக்கால அரசியலமைப்புத் தொடர்பான மாற்றத்திற்கு துருக்கி மக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாக 58 சதவீதத்தினர் வாக்களித்திருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தராதரத்திற்கு ஏற்ப அரசியலமைப்பில் பல மாற்றங்களைச் செய்வதற்கு துருக்கிய அரசாங்கம் விரும்புகிறது.

ஆனால் இம்மாற்றங்கள் நீதிச்சேவை மற்றும் ஏனைய விடயங்களில் அரசாங்கத்திற்கு கூடிய கட்டுப்பாட்டு அதிகாரத்தை வழங்கும் என விமர்சகர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். (ஶ்ரீ-2)



பக்ரைன் நாட்டிலிருந்து பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலா வந்திறங்கிய கல்ப் என்ற விமானத்தின் கழிவறைக்குள் பிறந்த பச்சிளங்குழந்தையை விமான பணிப்பெண்கள் உதவியுடன் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## மெக்ஸிகோவில் போதைப்பொருள் கடத்தல் மன்னன் கைது

மெக்ஸிக்கோவில் பாரிய போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த ஒருவரை அந்நாட்டு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். எல் கிராண்ட் எனும் பெயரால் அறியப்பட்ட சேர்ஜியோ விலாரியல் எனும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மெக்ஸி க்கோ சிட்டியின் கிழக்குப் பகுதி நகரான பியபிலாவில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றுமொரு போதைப்பொருள் கடத்தல் புள்ளியான பார்பி எனும் பெயரால் அறியப்பட்ட எட்கர் வெல்டெஸை கைது செய்து இரண்டு வாரங்களின் பின்னர் விலாரியல் கைது செய்யப்பட்டுள்ளார்.



விலாரியலைக் கைது செய்த படையினர் எந்தவித துப்பாக்கிப் பிரயோகமும் இல் லாமல் புலனாய்வு நடவடிக்கையொன்றின் மூலம் இலகுவாகக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவித்துள்ளனர். (ஶ்ரீ-2)

## கிரீஸ் நாட்டின் பிரதமர் மீது சப்பாத்து வீச்சு

(எதென்ஸ்)

கிரீஸ் நாட்டின் பிரதமரான ஜார்ஜ் பாபேந்த்ரூ பொருளாதார நெருக்கடி காரணமாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒருவர் அவர் மீது தான் அணிந்து இருந்த சப்பாத்துக்களை வீசினார். இந்தச் சம்பவம் தெசாலோனிக்கி என்ற இடத்தில் நடந்தது. அங்கு அவர் சர்வதேச கண்காட்சி ஒன்றை திறந்து வைப்பதற்காக சென்றிருந்தார். இதன் போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை சப்பாத்தை வீசியதாக கூறப்படும் 49 வயது மதிக்கத்தக்க மனிதர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது கூட்டாளிகள் 2 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர் அரசாங்கத்தின் தொழிற் சீர்திருத்தம் நிதி சிக்கனம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து சப்பாத்தை வீசியதாக அவர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)




## ஆபிரிக்காவில் வறுமை ஒழிப்பை மேற்கொள்ள பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை

### டோனி பிளேயர் தெரிவிப்பு

ஆபிரிக்க பிராந்திய நாடுகளில் நிலவி வரும் வறுமை நிலைமையை இல்லா தொழிப்பதற்கு இன்னும் பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவில் வறுமையை இல்லா தொழிக்கும் ஆணைக்குழுவின் தலைவராக டோனி பிளேயர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்க வலய நாடுகளில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சவால்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக வறுமை ஒழிப்பு தொடர்பான மாநாடு நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.



காலநிலை மாற்றம், உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் என்பவற்றினால் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சில நாடுகளின் பொருளாதாரங்களில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும் வறியவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

## கிட்டப்பார்வைக் குறைபாட்டுக்குத் தீர்வு; பிரி.ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு



கிட்டப்பார்வை குறைபாட்டிற்கு காரணமான மரபணுவை கண்டுபிடித்துள்ளதாக பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சொட்டு மருந்து மூலம் இந்தக் குறையை முழுமையாகக் களைந்து விட முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுவயதிலேயே கிட்டப்பார்வை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன் இந்த மருந்தை பயன்படுத்த தொடங்கினால் 10 வருடத்திற்குள் முழுமையாக குணமாகி விடுமாம். தற்போது பிரித்தானியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலும் பலர் கிட்டப்பார்வை குறைபாடுகளுக்காக லேசர் அறுவை சிகிச்சை , கண்ணாடிகள் அணிவது , லென்ஸ் போட்டுக் கொள்வது போன்ற சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சிகிச்சைகளுக்கு அதிகம் செலவாகும் என்பதோடு மட்டுமல்லாமல் இவை குறைபாட்டை முழுவதும் நீக்குவதில்லை. மூன்றில் ஒரு பிரித்தானியருக்கு இந்த குறைபாடு உள்ளதும் கணனியை அதிகம் பயன்படுத்துவோர் இந்த குறைபாடுகளினால் பாதிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வு முடிவுகளால் பிரித்தானியாவில் உள்ள பல மில்லியன் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளனர். (ஶ்ரீ-2)



நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மணல் சிற்பக்கண்காட்சியில் மார்டின் ரிஜர்ஸ் என்ற கலைஞர் உருவாக்கியுள்ள வித்தியாசமான மணல் சிற்பம்.

# பதிவுச் சான்றிதழ் மற்றும் சாரதி அனுமதியட்டை இன்றும் நாளையும் செயலகத்தில் விநியோகம்

**ஒரு தொகுதி பதிவுச் சான்றிதழ் மற்றும் சாரதி அனுமதி அட்டைகளை விநியோகிப்பதற்காகக் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து யாழ்ப்பாண மோட்டார் திணைக்களத்திற்கு அதிகாரி ஒருவர் வருகை தரவுள்ளார். இவை யாவும் இன்றும் நாளையும் விநியோகம் செய்யப்படவுள்ளன. எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.**

**பதிவுப் புத்தகம் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு,**

பி.பாஸ்கரன் (நல்லூர்), எஸ்.பிரதீஸ் (மானிப்பாய் மேற்கு), பி.கீதானந்த் (கிளிநொச்சி), கே.சோதிநாதன் (கோண்டாவில் வடக்கு), என்.நகுலேஸ்வரன் (மயிலிட்டி),ஜே.சுகிர்தராஜ் (யாழ்ப்பாணம்), ஆர்.பிலிப்புப்பிள்ளை(மாதகல் மேற்கு),

எஸ்.செந்தூரன் (இணுவில் கிழக்கு),எஸ்.சிவரூபன் (புலோலி தெற்கு), எஸ்.கதிர்காமநாதன் (புலோலி கிழக்கு), எஸ்.சுபாகரன்(திருநெல்வேலி), வி.ரமேஷ் (மட்டுவில் வடக்கு), வி.மோகனசுந்தரம் (வல்வெட்டித்துறை),

எஸ்.அருள்ராஜா (வட்டு.கிழக்கு),ஏ.சிவகரன் (தம்பசிட்டி), எஸ்.குணசேகரம்(பருத்தித்துறை), கே.கிருஷ்ணபவன் (சங்கத்தானை), ஏ.உதயராஜா (தெல்லிப்பழை மேற்கு), என்.சுரேந்திரன் (கொக்குவில் தெற்கு),

ஜே.அமல்ராஜ் (கோப்பாய்), கே.நாகலிங்கம் (கெருடாவில்), தி.ஆனந்தன் (உடுவில் கிழக்கு), எஸ்.சுஜீகரன் (கரவெட்டி மேற்கு), ரி.ராஜேந்திரம் (சங்கத்தானை), எஸ்.ரவிசீலன் (மட்டுவில் வடக்கு), எஸ்.சுதேசன் (மட்டுவில் வடக்கு),

வி.துஷ்யந்தன் (சுட்டுவன்), ஆர்.சிவநாதன் (கச்சாய் வீதி), ஏ.தங்கேஸ்வரன் (கொற்றாவத்தை), கே.தேவரஞ்சன் (மூங்கலாறு தெற்கு), கே.பதஞ்சலி (நயினாதீவு), வி.சண்முகராஜா (அரியாலை),

வி.தேவகுமார் (உரும்பிராய் கிழக்கு), கே.பாலேந்திரன் (திருநெல்வெலி தெற்கு), எஸ்.சிறிரஞ்சன் (வண்ணார்பண்ணை), எஸ்.பானுகோபன் (கோண்டாவில்), எஸ்.நிஜேந்தன் (கொழும்புத்துறை), ஆர்.பத்மசீலன் (புலோலி தெற்கு),

எஸ்.சத்யேந்திரன் (திருநெல்வேலி), கே.சத்தியவதனா (உடுவில் தெற்கு), எஸ்.கார்த்திக் (உரும்பிராய் வடக்கு), ஏ.சிவநேசன் (கோப்பாய் வடக்கு), எஸ்.சிவதாஸ் (உரும்பிராய் வடக்கு),

கே.செல்வராஜா (மீசாலை கிழக்கு), வி.பிரதாப் (கொழும்புத்துறை), ரி.றூரிவெல்சன் (சாவிளான்), எஸ்.பரமதாஸ் (கே.கே.எஸ்.வீதி), பி.முருகானந்தன் (அச்சுவேலி தெற்கு), எஸ்.ஞானகுமாரன் (கே.கே.எஸ்.வீதி), ஆர்.ஆனந்தசிறி (தோப்பு),

கே.மனோகௌரி (கந்தர்மடம்), ஆர்.கிருபாகரன் (யாழ்ப்பாணம்), ஏ.விநாயகமூர்த்தி (துன்னாலை மேற்கு), எம்.தயாபரன் (கொடிகாமம்), எஸ்.பவளகாந்தன் (மணிக்கூட்டு வீதி), ஆர்.துஷ்யந்தன் (வண்ணார்பண்ணை),

ரி.உதயசூரியன் (ஊரெழு கிழக்கு), கே.தவராசா (நெல்லியடி), வி.அமிர்தலிங்கம் (கச்சாய் தெற்கு), கே.வேலழகன் (மட்டுவில் மேற்கு), என்.ஜெகதாஸ் (உரும்பிராய் மேற்கு), எஸ்.இரத்தினசிங்கம் (உடுப்பிட்டி), ஆர்.சிறிதரன் (விசுவமடு),

ரி.சிவதீபன் (தாழையடி), எஸ்.கிருஷ்ணகுமார்(அரசடி), என்.ஜெயபாலன் (முள்ளியவளை), எஸ்.சிவானந்தம் (துன்னாலை), என்.சுதாகரன் (கொக்குவில்), என்.விசுவலிங்கம் (உடுப்பிட்டி), கே.ஜெயகாந்தன் (யாழ்ப்பாணம்),

வி.எட்வின் ஜக்சன் (கொழும்புத்துறை), ஜி.ஜெபநேசன் (சுழிபுரம் கிழக்கு), கே.ரங்கநாதன் (சரசாலை வடக்கு), ஆர்.ரவிக்குமார் (தெல்லிப்பழை கிழக்கு), கே.கிறிஸ்தோபர் (மானிப்பாய்), எஸ்.ஜெயநாதன் (அச்சுவேலி தெற்கு), என்.கார்த்திகேயன் (அச்சுவேலி தெற்கு),

எம்.சந்திரன் (திருநெல்வேலி), செ.பாலகுமார்(சாவகச்சேரி), மா.நந்தகுமாரன் (சாவகச்சேரி), தி.நிமலநாதன் (யாழ்ப்பாணம்), நா.நிமலராஜன் (கரவெட்டி), ச.மயூரன் (யாழ்ப்பாணம்), அ.யோகேஸ்வரன் (புலோலி வடக்கு),

த.வரதராசா (இணுவில்), வ.தவராசா (கொக்குவில்), ப.பற்றிக் இன்பராசா(பருத்தித்துறை), கு.குணதாசன் (பருத்தித்துறை), ர.தவராஸ் (பருத்தித்துறை), த.வினோதன் (யாழ்ப்பாணம்),

மா.குணரட்ணம்(யாழ்ப்பாணம்), சி.செல்வராஜா (யாழ்ப்பாணம்), ப.பற்றிக் கோமுஸ் (யாழ்ப்பாணம்), மா.நவரட்ணம்(கொடிகாமம்), சி.சிவகரன் (சாவகச்சேரி), சு.ஜெயந்தன் (கோப்பாய்), ஐ.விநாயகமூர்த்தி(புலோலி),

த.திருவருட்செல்வன் (அளவெட்டி மேற்கு), ம.மனேந்திரன் (சாவகச்சேரி), செ.பூலோகநாதன் (இணுவில்), தி.பாஸ்கரன் (சுன்னாகம்), க.ராஜேந்திரன் (திருநெல்வேலி), சி.சிவசேகரம் (கைதடி), ரா.தபேந்திரன் (கொக்குவில்),

ர.ஜெகதீசன் (சுன்னாகம்), வ.இந்திரன் (தவசிக்குளம்), சு.பிரபாகரன் (சாவகச்சேரி), ரி.அனோதன் (கிளிநொச்சி), அ.அன்பழகன் செல்வம் (சுழிபுரம்), வை.கந்தசாமி (சுழிபுரம்),

சு.இராகராசன் (மீசாலை), க.சிதம்பரப்பிள்ளை(புலோலி), ச.சிவகுமாரன் (பருத்தித்துறை),ஏ.அழகரத்தினம் (யாழ்ப்பாணம்), ச.உதயகுமாரன் (வியாபாரிமூலை, பருத்தித்துறை),

ச.சந்திரசேகரம் (மீசாலை), ஜெ.இராமலிங்கம்(கட்டப்பிராய்), சி.ரூபி (திருநெல்வேலி கிழக்கு), பூ.நகுலேஸ்வரன் (வட்டுக்கோட்டை), த.லேவன் பீற்றர்(யாழ்ப்பாணம்), ந.இராஜேஸ்வரன்(சங்கானை),

தே.கோபிநாத் (அச்சுவேலி), ஆ.சுரேஸ் (தெல்லிப்பழை), த.பினான் கம்பனி லிமிட்ட், கொழும்பு), ரா.மனோகரன் (கொக்குவில்), பொ.சண்முகலிங்கம் (கட்டப்பிராய்),ம.மதனசீலன் (யாழ்ப்பாணம்), கு.காசிநாத் (கொட்டடி),

வ.யோகநந்தன் (சாவகச்சேரி), தி.நிமலநாதன் (யாழ்ப்பாணம்), செ.சாந்திரசீகரன், க.சிறிதரன்(கோப்பாய்), அ.அன்ருட்நெல்சன் (தொட்டிலடி), வ.மகாலிங்கம்(கொழும்புத்துறை),

பொ.ஜெகதீஸ்வரன் (கிளிநொச்சி), க.இராஜதுரை (சாவகச்சேரி), மா.சத்தியகுமார் (சுன்னாகம்), ச.உதயகுமார் (சாவகச்சேரி), ச.சரவணபவ (பாசையூர்), வ.கேசவன் (உரும்பிராய் தெற்கு), ரூ.ஜெகம் (சாவகச்சேரி), சு.இராஜேந்திரன் (யாழ்ப்பாணம்), ஞா.பிரசாத் (சுண்டுக்குளி), வி.நவநீதன் (பருத்தித்துறை),

ந.கிருஷ்ணராஜா (கரவெட்டி), த.திருச்செல்வம்(சுழிபுரம்), பொ.சிறிகாந்தன்(இளவாலை மேற்கு), அ.செந்தில்ராஜன் (கரவெட்டி), ஸ்ரீ.கிருபாமேரி(மானிப்பாய்),க.மச்சினராஜா (சாவகச்சேரி தெற்கு), சி.சந்திரவர்ணன் (திருநெல்வேலி),

ரா.கணபதி (அச்சுவேலி), க.செந்தூரன் (தெல்லிப்பழை), சி.ஞானரூபன் (வட்டுக்கோட்டை), ர.கிருஷ்ணகுமார் (வல்வெட்டித்துறை), ல.தவராஜா (பண்டத்தரிப்பு), ஆ.அனந்தகுமார் (ஆனைக்கோட்டை), வ.தெய்வேந்திரம் (சாவகச்சேரி),

கே.நளினி(புலோலி கிழக்கு), கே.வித்தியசங்கர் (கொல்லன்கலட்டி), ஏ.தர்மநாதன் (சாவகச்சேரி), கே.தயாபரன் (நல்லூர்), ரி. பரிவர்த்தனராஜா(பருத்தித்துறை), எஸ்.தவராசா (மட்டுவில்), எம்.செல்வகுமாரன் (இராமநாதன் வீதி),

கே.தமிழ்வேந்தன் (வண்ணார்பண்ணை), ரி.ரகிகரன் (புலோலி கிழக்கு), எஸ்.சுதந்தரலிங்கம் (பருத்தித்துறை), ஆர்.தமிழ்ச்செல்வன் (தர்மபுரம்), எஸ்.சத்தியமூர்த்தி(புலோலி மேற்கு), ஆர்.தவராசா (குப்பிளான்), ரி.யோகநாதலிங்கம் (சுழிபுரம்),எஸ்.ஜெயகிருஷ்ணா (இராமநாதன் வீதி),

ஏ.உதயனன் (திருநெல்வேலி கிழக்கு), ரி.சுதராசா (சண்டிலிப்பாய் தெற்கு), எஸ்.ஆதவன்(வட்டுக்கோட்டை), வி.சசிகுமார்(கந்தர்மடம்), பி.சிறிதர் (துன்னாலை தெற்கு), பி.ஜெயசேகரன் (திருநெல்வேலி கிழக்கு), டி. தவராசா (பருத்தித்துறை),

எஸ்.ஞானரட்ணம் (மட்டுவில் தெற்கு), ஏ.ரங்கநாதன் (கோப்பாய் தெற்கு), ஏ.ஜேசுதாஸ் (மாதகல்), வி.அபயராசா (நல்லூர்), என்.சிறிபிரேம்குமார்(மீசாலை மேற்கு), ஆர்.பொன்னையா (முஸ்லிம் வீதி), என்.கனகசபை (தனங்கிளப்பு),

எஸ்.ரவிச்சந்திரன் (ஆனந்தபுரம்), பி.பாலகுமார் (திருநெல்வேலி),என்.திருச்செல்வம் (யாழ்ப்பாணம்), விஜேந்திரன் (வண்ணார்பண்ணை), பி.மனோகரன் (வட்டு. வடக்கு), எம்.சாந்தாதேவி (சாவகச்சேரி வடக்கு),ஆர்.மயூரன் (உசன்),

ரி.தயானந்தன் (மணியந்தோட்டம்), பி.அஞ்சலி றெரன்ஸ் (யாழ்ப்பாணம்), காயத்திரி (செல்லர் லேன்), ஏ.அருள்றொக்சன் (குருநகர்), என்.அருட்செல்வன் (செம்பியன்பற்று தெற்கு), எஸ்.நித்தியானந்தம் (துன்னாலை தெற்கு),

கே.பிரேமச்சந்திரன்(கரவெட்டி), கே.பிரகாஷ்(கன்னாதிட்டி), என்.ஜெயரங்கநாதன் (இருபாலை), எஸ்.அந்தோனி (கூழாவடி), எஸ்.நாகேந்திரன் (நீர்வேலி தெற்கு), எஸ்.சண்முகராசா (சுதுமலை தெற்கு), வி.ஜெயந்தன் (நெடியகாடு),

ஜே.வினோதராசா (வியாபாரிமூலை), ரி.விஜயகுமார் (பருத்தித்துறை), ஆர்.பிரதாபன் (துர்க்காபுரம்), எஸ்.மோகனராஜா (சங்கத்தானை), எஸ்.தேவராஜா (குடத்தனை), எஸ்.தாமோதரநாதன் (சுழிபுரம்),

ரி.ஜெயபாலசிங்கம்(தொண்டைமானாறு), ந.பாஸ்கரன் (சுன்னாகம்), எஸ்.ராஜ்குமாரன் (கரணவாய்), எஸ்.தனயசிங்கம் (கொல்லன் கலட்டி),எல்.சுரேஸ்குமார் (யாழ்ப்பாணம்), எஸ்.கந்தையா (சுப்பர்மடம்), எல்.சுரேஸ்குமார் (ஸ்ரான்லி வீதி),

க.பாலசிங்கம் (சுன்னாகம்), கு.இராமகிருஷ்ணநாயர் (சுழிபுரம்), நா.யோகலிங்கம் (தெல்லிப்பழை), மு.அரியரத்தினம்(பருத்தித்துறை), சு.சண்முகலிங்கம் (சாவகச்சேரி), சு.செந்தில்ராஜகுருக்கள் (தெல்லிப்பழை),

ந.சிறிகந்தராஜா (பருத்தித்துறை),செ.செல்வச்சந்திரன் (பரந்தன்), முத்துலிங்கம் (நாவாந்துறை), சி.கருணநாதன் (கோண்டாவில்), ர.சிவலிங்கநாதன் (சுன்னாகம்), சி.கிருபானந்தன் (யாழ்ப்பாணம்),

வே.யோகசிவம்(யாழ்ப்பாணம்), ந.கேதீஸ்வரன் (சுன்னாகம்), மு.சடாட்சரம்(நல்லூர்), லூ.றிஜிலுசுதன் (ஊர்காவற்றுறை), ம.ஜோன் பிலிப்(சுண்டுக்குளி), ஸ்ரீ.வேலாயுதம்(கரவெட்டி), அ.சின்னத்துரை (சுழிபுரம்),

ப.சிவானந்தன் (நல்லூர்), ப.குகநேசன் (யாழ்ப்பாணம்), வே.சந்திரசேகரம் (கொடிகாமம்), சி.தங்கவேலு (காங்கேசன்துறை),ஜெ.சண்முகநாதன் (இளவாலை), கு.பரந்தாமன் (இணுவில்), க.தர்மராசா (சுழிபுரம்),

சா.லியோன்சியல் (கொழும்புத்துறை), ரி.திருக்குமார் (யாழ்ப்பாணம்), ர.பிரபாகரன் (சாவகச்சேரி), ரா.பாஸ்கரன் (சுன்னாகம்), க.சசிதரன் (சுன்னாகம்), ப.முத்துராமன் (யாழ்ப்பாணம்), கி.ஜெயசுதன் (தெல்லிப்பழை), ம.மதன் (பொலிகண்டி), க.செல்வகுமார் (சுன்னாகம்), த.தவசீலன் (கரவெட்டி),

சி.ஸ்கந்தன்ராஜா (தெல்லிப்பழை), ஸ்ரீ.நவநீதன் (சுன்னாகம்), ரா.ஜேசுராசா (கோப்பாய்), சு.ஜெயசிங்கம்(சாவகச்சேரி), பூ.விஜயகரன் (யாழ்ப்பாணம்), ரா.பிரான்ஸிஸ் (ஈச்சமோட்டை),

கு.தவராசா (மீசாலை), சு.மாகிவரம் (சுன்னாகம்), சு.ஜெயகுமார் (மருதங்கேணி), பு.புஷ்பலிங்கம் (யாழ்ப்பாணம்), க.ஞானேஸ்வரி (திருநெல்வேலி தெற்கு), வை.கேதீஸ்வரன் (சித்தன்கேணி),

சி.நிரஞ்சன் (திருநெல்வேலி தெற்கு), செ.தியாகேஸ்வரன் (நல்லூர்), சே.றொக்மரியதாஸ்(பாசையூர்), ம.பாஸ்கரன் (சாவகச்சேரி), சீ.செல்வராய் (தெல்லிப்பழை), த.ஜெயபாலசிங்கம்(வல்வெட்டித்துறை),

ஐ.சுரேஸ்குமார் (யாழ்ப்பாணம்), க.உதயராசா (இராமநாதன் வீதி), க.உதயகுமார் (அல்வாய்), க.திருமாறன் (சாவகச்சேரி), கு.மருள்குமார் (வட்டுக்கோட்டை), ச.கனிபாகரன் (சுன்னாகம்),

க.சத்தியபாலன் (கல்வியங்காடு), ந.சிவயோகராஜா (சுன்னாகம்), சி.வசந்தன் (யாழ்ப்பாணம்), ஐ.சுரேஸ்குமார் (யாழ்ப்பாணம்), கா.சிறிவரதன் (சுன்னாகம்), நா.குமாரதாஸ் (சாவகச்சேரி),

பொ.கோடீஸ்வரன் (நுணாவில்),சு.விஜயகுமாரன் (கீரிமலை), பா.கல்யாணி (கல்வியங்காடு),சீ.தியாகராஜா (அரியாலை), சு.சிங்கராஜா (நல்லூர்), ர.பகீரதன் (கீரிமலை), சி.கனகரத்தினம் (இணுவில்), ரா.ரவீந்திரன் (கரவெட்டி),

சி.சிவகுமார் (அச்சுவேலி),பூ.விஜயகுமார் (சாவகச்சேரி), க.மனோகரராஜா (கல்வியங்காடு), அ.கிருஷ்யந்தன் (யாழ்ப்பாணம்), சி.சிவகுமார் (பருத்தித்துறை), த.கோபிகிருஷ்ணன் (சுன்னாகம்). (ச)

# குருதியில் தொடங்கி குருதியில் முடிந்த அறுபத்தொரு வருட காலப் போராட்டம்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 61 வருடங்களாக அறவழியாகவும் ஆயுத ரீதியாகவும் நடைபெற்ற ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டங்கள் குருதியில் தொடங்கி குருதியிலேயே முடிந்துள்ளது தான் உண்மை என மட்டு.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஜேர்மனியில் நடைபெற்ற அகம்புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அறவழியில் நடத்தப்பட்ட போராட்டம் எப்படி குருதியில் முடியும் என நீங்கள் கேட்கலாம். தமிழ்த் தலைவர்களால் 1956 காலி முகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தில் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டு தமிழ்த் தலைவர்கள் குருதி சிந்தினார்கள்.

இதுதான் முதல் குருதி. 1958 இல் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இரு மலையகத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இது தான் தமிழர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட முதல் கொலை.

இவ்வாறு தொடர்ந்த தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள் இறுதியில் சர்வதேச நாடுகளின் உதவியுடன் கடந்தவருடம் (2009) மே 19 ஆம் திகதி விடுதலைப்புலிகளை முற்றாக அழிக்கப்பட்டதாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிப்புச் செய்திருந்தது.

இந்த அறிவிப்புக்குப் பின்னர் தமிழ் மக்களிடையே இலங்கை அரசு பல குழப்பங்களைத் திட்டமிட்டுச் செய்து வருகின்றது. விடுதலைக்காகப் புறப்பட்ட எமது இனம் பல கட்டங்களில் குருதி சிந்திய நிலையில் இரண்டு இலட்சம் மக்களை இழந்தவர்களாய் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களாய் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அனைத்துலகிலும் இடம் பெயர்ந்தவர்களாய் 89 ஆயிரம் இளம் பெண்கள் கணவனையிழந்த இளம் தாய்மார்களாய் 25 ஆயிரம் பேர் அங்கவீனர்களாய் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகவரி தெரியாத முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றார். (ச-5)





கிளிநொச்சியில் வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆடை தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அறிவியல்நகர் பகுதியில் நடைபெற்றது. அடிக்கல்லினை இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நாட்டினார். தொடர்ந்து உற்பத்தி பயிற்சி நிலைத்தை கிளிநொச்சி நகரப்பகுதியில் ஆரம்பித்து வைத் தார். கட்டிடத்தை நாமல் திறந்து வைப்பதையும் பிரதியமைச்சர் மகிந்தானந்த உரையாற்று வதையும் தையல் பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# கொழும்பு திரும்பும் போது...

மதிக்கப்பட்டுள்ளனர்.

அனுராதபுரத்திலிருந்து வெலிகடை சிறைச்சாலைக்குக் கைதிகளை ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்த பஸ் வண்டி மாரவிலப் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் பின்புறமாக மோதி இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகள் மாரவில பொலிஸ் நிலைய மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இவ் வாகனத்தில் சென்ற குடும்பத்தினரின் யாழ்ப்பாண வீட்டில் கடந்த மாதம் 14ஆம் திகதி பாரிய திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

சுமார் 147 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டன. யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் இது சம்பந்தமாக குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கைதடியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா டபிளேஸ்வரன் (வயது 48) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இவரைக் காணாத நிலையில் நேற்று மாலை தேடியபோது வீட்டுக்கு அருகிலிருந்த கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

சடலம் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச)

# மோ. சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் ஓடி வீதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுதுமலையைச் சேர்ந்த செல்வராசா நிசாந்தன் (வயது 26) சென்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். இவர் சுயநினைவு இழந்த நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

# கனடாவில் ஒன்றிணை...

குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய பஞ்சாப் வன்முறைகளில் ஈடுபட்ட பாபர் கல் சா அமைப்பு கனடாவில் பலமான அமைப்பாக உருவாகியுள்ளது.இதேபோன்றே தமிழீழ விடுதலைப்புலிகளும் கனடாவில் தமது தளத்தை அமைக்க முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவை நோக்கி மேலும் ஒரு கப்பல் வரவுள்ளதாக வெளியான தகவல்களையடுத்து அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

கனடாவுக்கு செல்வதற்கான மக்களை திரட்டும் பணிகளும் நிதிகளை திரட்டும் பணிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் கனடாவுக்கு அடுத்த கப்பல் செல்வதற்கு மேலும் காலம் பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதற்குரிய முறையில் கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நோர்வேயிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை கனடாவில் உருவெடுக்க கூடும் என ரொஹான் குணரத்ன குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# போட்டிக்கு ஓடிய வாக...

வித்தியாலயத்தில் தரம் 6இல் கல்வி பயில்வதாக தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சங்கானையைப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டு சென்ற பிரஸ்தாப சிறுமி வீதியின் ஓரத்தில் நின்றிருந்த வேளை போட்டிக்கு ஓடிய தனியார் பஸ்களில் ஒன்று சிறுமியை மோதியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். ஒரு வானை மற்றைய வான் முந்திச் சென்றபோதே வீதியோரத்தில் நின்ற சிறுமியுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# இராணுவ...

இராணு நீதிமன்றம் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்தபோது இடம் பெற்றதாகக் கூறப்படும் இராணுவ ஆயுதக்கொள்வனவில் மோசடி தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருகின்றது. இவ்விசாரணை இன்று பிற்பகல் 2.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பிரணாப்...

இவரது விஜயம் குறித்த காரணத்தை இரு நாட்டு அரசுகளும் உத்தியோகபூர்வமான தகவல்கள் எதையும் வெளியிடவில்லை. (ச-5)

# போரின் இறுதியில்...

டி சில்வா கூறியுள்ளார்.

இந்தப் போர்க் காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார்கள் என்று வெளிநாட்டு மற்றும் உள்ளூர் செய்தியாளர்கள் மீது அவ்வப்போது இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டி வந்துள்ளது.

சில அரசாங்க ஊடகங்களின் செய்தியாளர்களைத் தவிர ஏனைய செய்தியாளர்களை அதிகாரிகள் போர்ப் பகுதிக்கு அருகே செல்ல அனுமதிக்காததால் தாம் கேள்விப்பட்டதை மாத்திரம் வைத்துக் கொண்டே பல செய்திகள் வந்தன. அதனால்தான் போரில் செய்தி ஊடகங்கள் ஆக்கப்பூர்வ பங்காற்றவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது என பத்திரிகையாளர் மனிக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னதாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் செய்தியாளர்களின் நிலைமையை விடுதலைப் புலிகளும் கடுமையாக்கியிருந்தனர்.

போரின் போது யார் என்ன செய்தார்கள் என்பதை வைத்து பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் எந்தப் பலனும் கிடையாது.

அதற்குப் பதிலாக அனைவரது மனக்காயங்களும் ஆற்றப்பட வேண்டும் என்பதை நாடு அங்கீகரிக்க வேண்டும் என்றும் அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும், இராணுவத்தினதும் வாழ்க்கையை வழமைக்கு திரும்பச் செய்யும் நடவடிக்கைக்கு உதவும் நிதிக்காக இலங்கையர் ஒவ்வொருவரும் ஒரு வரியைச் செலுத்த வேண்டும் என்றும் ஒரு புதுமையான கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் அடிமட்டத்தில் எந்தவிதமான இன முரண்பாடும் கிடையாது என்றுதான் அடிப்படையில் நம்புவதாகவும் சண்டே ஐலண்ட் ஆசிரியர் மனிக் டி சில்வா கூறியுள்ளார். (ச-5)

# உள்விவகாரங்களில்...

அமெரிக்க தனது சொந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முனைப்பு காட்ட வேண்டும் எனவும் இவ்வாறான பொறுப்பற்ற கருத்துக்களை அரசாங்கம் கவனத்திற்கு கொள்ளாது எனவும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத்திருத்தங்கள் தொடர்பில் அமெரிக்க வெளியிட்ட கருத்தின் மூலம் அரசாங்கத்தை மட்டுமின்றி நாட்டின் அதி உயர் சட்ட பீடமான உச்ச நீதிமன்றத்தையும் இழிவு படுத்தியுள்ளது.

18ஆவது திருத்தச் சட்ட மூலம் நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டது. அமெரிக்காவின் விமர்சனம் கண்டிக் கப்பட வேண்டியது.

சட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனத் திருத்தங்களை எவரும் விமர்சிக்க முடியாது. அதற்கான உரிமையும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனத் திருத்தம் ஜனநாயகத்தை உதாசீனம் செய்யும் வகையில் அமையப் பெற்றுள்ளதென அமெரிக்கா அண்மையில் அறிக்கை வெளியிட்டிருந்தது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை வருத்தமளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதென வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

ஆலோசனையும் வழிகாட்டலும்

தெரிவுப் பரீட்சைக்கான விசேட வழிகாட்டி

பிரபல புத்தக நிலையங்களில் விற்பனையாகின்றது.

இதற்கான விசேட கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் இன்று முதல் தினமும் 2–5 மணிவரை நடைபெறும்.

ஆசிரியர் :– த.தவசேகர். (C-1173)

Api Beauty Parlour and Training Academy

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவிகள் மற்றும் ஆர்வமுள்ள நங்கையர்களுக்கான துரித காலப் பயிற்சிகள்.

Bridal make up புது விதமான மணப்பெண் அலங்காரம்

Cake Icing-கேக் ஐசிங் பலவகையான ஐசிங் பூக்களுடன்

Facials-முக அலங்காரம்

Hair cutting Nail Arts

Hair treatments Pedicure

manicure இன்னும் பலவகையான பயிற்சிகள் வழங்கப்படும்.



Note-பயிற்சி முடிவின்போது சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிற்சி ஆரம்பம்:16.09.2010 நல்லூர் கோவில் வீதி,

தொடர்புகளுக்கு:0212229586 இல.06,சட்டநாதர் வீதி, நல்லூர். (2463)

Diploma Courses... புதிய பிரிவுகள் ஆரம்பம்

*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing, Kids Programs

*Web Development *Video Editing *AutoCAD *VB.net, *LINUX, *ICT

International Courses... Government Scholarship

Computer Engineering - USA, CCNA, SCJP

Java programmer, Linux, BCS, CIMA - UK, ICDL, Hacking, Toefl / IELTS

MCS Free ICDL, BCS, Hardware, English

Supported By UNDP/JRRP

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு

324,Palaly Road,Parameswara Junction

Web site : www.mcsitcampus.org

90% Scholorship

SMS your name & course to 0772 395 895

Degree Course BIT University of Colombo

Closing Date 16.09.2010

பில் கிளாக், விற்பனையாளர் உடன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொபைல் சொப் ஒன்றிற்கு பில் கிளாக், விற்பனையாளர் தேவை. வயதெல்லை 18 -30. உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் ரூபாய் 12,000 /=வழங்கப்படும்.

தொடர்பு: 0774953400 (2458)

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி–திக்கம் கிளை

2011-A/Lபௌதிகவியல்

3.30 – வெப்பவியல்

4.30 – புலங்கள்,

2012-A/L

5.30 – அலைகளும் அதிர்வுகளும்

யாழ்.நகர் ஆசிரியர்:S.ஸ்பெல்மன்

A/L DAY கணிதம், விஞ்ஞானப் பிரிவுகள்

ஆரம்பம்:பி.ப.4.00-16.09.2010 (2459)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.